# ம ந்றுத்து கவரிகள்


– பெண் படைப்பாளிகளின் இலக்கியத் தொகுப்பு

– வரலாற்று ஆய்வாளர். ஜலீல் ஜீ

ம்பாறை மாவட்ட
மிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை

# முற்றத்து கவரிகள்

– பெண் படைப்பாளிகளின்
இலக்கியத் தொகுப்பு



– வரலாற்று ஆய்வாளர். ஜலீல் ஜீ

அம்பாறை மாவட்ட
தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | - | முற்றத்து முகவரிகள் |
| விடயம் | - | அம்பாரை மாவட்ட பெண் படைப்பாளிகளின் இலக்கியத் தொகுப்பு |
| வகை | - | இலக்கியம் |
| தொகுப்பாசிரியர் | - | வரலாற்றாய்வாளர் ஜலீல் ஜீ |
| முதல் பதிப்பு | - | 2015 டிசம்பர் 27 |
| பதிப்புரிமை | - | ஆசிரியருக்கே © |
| மொழி | - | தமிழ் |
| பக்கங்கள் | - | **84 + xxiv** |
| கணனி வடிவமைப்பு | - | ரீ. கிரிநிவாசன், காரைதீவு |
| வெளியீட்டாளர்கள் | - | அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை வெளியீட்டுப் பிரிவு |
| ISBN இல. | - | 978 - 955 - 7965 - 00 - 09 |
| விலை (அன்பளிப்பு) | - | ரூபாய் 300.00 |
| முன்னட்டை | - | ஏ. எச். ஜௌபர் காரியப்பர் |
| அச்சுப் பதிப்பகம் | - | றோயல் பிரின்டர்ஸ் சாய்ந்தமருது |
| தொடர்புகளுக்கு | - | ஜலீல் ஜீ<br>தென் கிழக்கு பல்கலைக்கழக எதிர்<br>அம்பாரை வீதி, வீரமுனை - 04.<br>சம்மாந்துறை.<br>0779802423<br>**manaafjeefa@gmail.com** |

# சமர்ப்பணம்

**அன்னை தமிழ் மடியின் அரியணைக்கு...**

முழு நிலவின் ஒளிக்கீற்றாய்
முக்கனியின் சுவைச் சாற்றாய்
செழுமை சேர் கதிரவனின்
சிதறல் சார் படிமமென
ஒளிர்கின்ற தமிழ்த் தாயே!
உயிரே எம் கலையமுதே!
வளர்கின்ற பேரவையின்
வளர்ச்சிக்காய் நின் மடியில்
சமர்ப்பித்தோம் இந்நூலை,
சாகா வரம் பெறவே
ஆசீர் வதித் தெம்மை
ஆட்கொள்க அன்புருவே!

# உள்ளடக்கம் I


| இல. | விடயம் | பக்க இல. |
|---|---|---|
| 01. | முற்றத்து முகவரிகள் மணம் பரப்பட்டும்<br>*- விபுலமாமணி வீ.ரீ. சகாதேவராஜா -* | vii |
| 02. | அணிந்துரை :<br>*- பேராசிரியர் செ. யோகராசா* | ix |
| 03. | முற்றத்து முகவரிகளின் சில வரிகள்<br>*- கலாபூஷணம் - முகில்வண்ணன் -* | xii |
| 04. | முற்றத்து முகவரிகளின் சில வரிகள்<br>*- கலாபூஷணம் - யூ.எல். அலியார் -* | xiii |
| 05. | ஆசியுரை :<br>*- விமலநாதன் - மே.மா.அரசாங்க அதிபர் -* | xv |
| 06. | ஆசியுரை :<br>*- எம்.ஐ.அமீர் - மே.மா.அரசாங்க அதிபர் -* | xvi |
| 07. | தொகுப்பாசிரியரின் இதயத்திருந்து :<br>*- தேசமான்ய ஜலீல் ஜீ -* | xvii |
| 08. | வெளியீட்டுரை :<br>*- அ.மா.த.எ.மே.பே. வெளியீட்டுப் பிரிவு -* | xix |
| 09. | பேரவையின் நடப்பு வருட நிர்வாகிகள் : | xxi |
| 10. | பேரவை கடந்து வந்த பாதையினில் :<br>*- ஜீ - நிறுவுனரும், பிரதம செயற்பாட்டாளரும் -* | xxiii |

# உள்ளடக்கம் II


| இல. | விடயம் | பக்க இல. |
|---|---|---|
| 01. | கலாபூஷணம் முபிதா உஸ்மான் - சாய்ந்தமருது | 01 |
| | "சவால்களை முறியடித்து வெற்றி பெறுவோம்" | 03 |
| 02. | கவிதாயினி பற்றூர் பரமேஸ்வரி - ஆலையடி வேம்பு | 06 |
| | "என்னுயிர்த் தோழியே..." | 07 |
| 03. | கலாபூஷணம் பரீதா இஸ்மாயில் - சம்மாந்துறை | 09 |
| | "அபலைப் பெண்கள் துயர் களைவோம்" | 11 |
| 04. | கலாபூஷணம் பௌஸியா அலியார் - சம்மாந்துறை | 14 |
| | "டெங்குத் தேக்கம்" | 16 |
| 05. | கவிதாயினி யுகதாரினி செசிலியா - வீரமுனை | 18 |
| | "பெண்களின் பாதுகாப்பு" | 20 |
| 06. | கவிதாயினி சிவகாமிதேவி முருகமூர்த்தி - திருக்கோவில் | 21 |
| | "புதைந்த உணர்வுகள்" | 23 |
| 07. | கவிதாயினி மலரா (டாக்டர். புஷ்பலதா) - பாண்டிருப்பு | 25 |
| | "என் பறவை அலைகிறது" | 27 |
| 08. | கவிதாயினி மாஜிதா தவ்பீக் - மருதமுனை | 29 |
| | "தங்க நிலவே" | 31 |
| 09. | கவிதாயினி கலைமகள் ஹிதாயா றிஸ்வி - சாய்ந்தமருது | 34 |
| | "உலகமெங்கும் எங்களைப் போல் ஏழைகளுண்டோ" | 36 |
| 10. | கவிதாயினி ஜுல்பிகா ஷெரீப் - கல்முனை | 37 |
| | "சிறுவர் நலனில் சிரத்தை கொள்வோம்" | 41 |

| இல. | விடயம் | பக்க இல. |
|---|---|---|


11. கவிதாயினி அனுஷா அஸீஸ் - சம்மாந்துறை 45

“கடல் வளம்” 47

12. கவிதாயினி ஹரீஷா சமீம் - மருதமுனை 49

“குழந்தை மனம்” 50

13. கவிதாயினி எம்.எஸ். றஸ்மியா - வரிப்பத்தான்சேனை 51

“மனதை மீட்டும் மழையழகியே....” 52

14. கவிதாயினி சபீனத்துன் நுஹா - சம்மாந்துறை 54

“மாழட்டும் மழலை தின்னல்” 56

15. கவிதாயினி றமீஸா நௌசாட் - சம்மாந்துறை 58

“ஆத்துப் பக்கம் போற மச்சான்” 60

16. கட்டுரையாளர் கலைவாணி பிரதீபன் - வினாயகபுரம் 61

“பாரதி பாடலில் பெண் விடுதலை” 63

17. கட்டுரையாளர் வீ. சுஜாழினி - பாண்டிருப்பு 70

“பாதை மாறிய பயணங்கள் - பெண்களின் யதார்த்த நிலை 71

18. கவிதாயினி ஏ.முபீதா - சம்மாந்துறை 74

“என்னுடன் பேசிய தென்றல்” 76

19. கவிக்குயில் ஸப்னா அமீன் - சாய்ந்தமருது 77

“சமூகத் தலைமை” 79



# முற்றத்து முகவரிகள் மணம் பரப்பட்டும்...

படைப்பொன்று பிறந்து அதன் படைப்புவன்மையும் இதழியல் அழுத்தமும் கனதியும் உரசிப்பார்க்க முன்பே ஓய்ந்து போகும் இன்றைய நவீனகாலவோட்டத்தில் இலக்கியத்துறையில் மகளிர் படைப்புகளை தாங்கி முகிழ்ந்துள்ளது "முற்றத்து முகவரிகள்" எனும் தொகுப்பு மலர்.

ஒவ்வொரு படைப்பாளியும் ஒவ்வொரு அக்கினிக்குஞ்சு. தேடலும் படைத்தலும் அவர்தம் இருகண்கள். தேடலின் திரட்டுக்களை பந்திவைக்கின்றபோது அது ஒருவகைப் படைத்தலாகின்றது.

இலக்கியம் மனிதனைப் பாதிக்க வேண்டும். பாதிப்புகளின் தளத்திலிருந்து எழுவதே இலக்கியம். ரசனைகள் கூட்டுக்கழிப்பு இலக்கியம் என்றெல்லாம் இலக்கியம் பற்றிய கருத்தாடல்களும் பார்வையும் காலமுள்ளவரை நீண்டுசெல்லும்.

பேனாவால் காவியமும் படைக்கலாம் காதும் குடையலாம். எழுத்தாளனின் கையிலிருக்கின்ற பேனா பேசும். இன்று விரல்நுனியில் உலகமிருக்கின்ற காலத்தில் பேனா பற்றிப் பேசுகின்றாரே எனக்கேட்பதும் காதில் விழுகிறது. எதுஎப்படியோ பேனா பேனாதான்.

என்ன செய்தோம்? என்ன செய்கின்றோம்? என்ன செய்யப்போகின்றோம்? என்பதற்கு அப்பால் நாம் பிறந்தோம் வாழ்ந்தோம் என்றில்லாமல் நாம் வாழ்ந்த வரலாற்றுத் தடயங்களைப் பதித்துவிட்டுச் செல்லவேண்டாமா என்று பலர் ஆதங்கப்படுவர். ஆனால் அதற்கு பதிலளிப்பவன் பேனா தூக்குபவன்தான் சொந்தக்காரன்.

இலக்கியம் புரிதலுடன் வளரவேண்டும் என்பதே எமது அவா.

எமது பேரவையின் வெளியீட்டுப்பிரிவின் முயற்சி காரணமாக இருமாதங்களுள் இரண்டாவது மலருக்கு செய்தி பதிகின்ற பாக்கியத்தைப் பெற்றுள்ளமையையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

முதலில் "கமலதீபம்" நினைதல் மலருக்கு செய்தி பதியவேண்டிவந்தது. ஒரு மாதகாலத்துள் இன்று இரண்டாவது மலருக்கு பதிகின்றேன்.

பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் மகளிரின் இலக்கியப்படைப்புகளை தொகுத்து வெளியிட தலைவர் ஜலீல் ஜீ நீண்டநாட்களாக ஆவல்கொண்டிருந்தார். அம்பாறை மாவட்ட பெண் எழுத்தாளர்களது இலக்கியப்படைப்புக்கள் அடங்கிய ஒருதொகுப்பை எழுத்தாளர் பேரவையொன்று வெளியிடுவது இதுவே முதற்றடவையாகும்.

தலைவரது அதீதமுயற்சியின் பிரதிபலிப்பாக "முற்றத்து முகவரிகள்" எனும் இத்தொகுப்புமலர் தங்கள் கரங்களில் தவழ்கின்றது. நுகர்வதற்காக வழிவிட்டு....

தேசமான்ய வி.ரி.சகாதேவராஜா ஜே.பி. A.D.E.
பொதுச் செயலாளர்
அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர்
மேம்பாட்டுப் பேரவை



# அணிந்துரை

## பேராசிரியர். செ. யோகராசா

## - கிழக்குப் பல்கலைக்கழகம் -

பெண்ணிலை வாத நோக்கில் பெண்கள் இலக்கியங்கள் வெளிவருகின்ற சம கால ஈழத்து இலக்கியச் சூழலில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து வெளிவரும் இத்தொகுப்பின் வரவு மிக முக்கியமானது.

ஊடகவியலாளராகவும், பிரதேச வரலாறு, இடப் பெயர் ஆய்வு ஆகியவற்றில் ஈடுபாடு உடையவராகவும், இலக்கியச் சந்திப்புக்களை ஏற்படுத்தி ஆவணப்படுத்துவராகவும் அறியப்பட்டுள்ள ஜலீல் ஜீ அவர்கள் இந்நூல் ஊடாக இலக்கியத் தொகுப்பாசிரியராகவும் தன்னை இனங்காட்டி இருப்பது பாராட்டுக்குரியது.

இத்தொகுப்பு நூலினூடாக 16 கவிதாயினிகளும், 3 கட்டுரையாளர்களும் அம்பாறை என்ற முற்றத்து முகவரிகளாக தம்மை இனங்காட்டியுள்ளனர்.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் பற்றி முதலில் குறிப்பிட வேண்டியுள்ளது. இவ்வாறு குறிப்பிடும் போது இதில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பல்வேறுபட்ட விடயங்கள் சார்ந்தனவாக உள்ளனவைகள் பற்றி முதலில் குறிப்பிடுவது அவசியமானது.

பெண்களது பேரவலங்களை வெளிப்படுத்தி அவர்களை எழுச்சி உறச் செய்யும் கவிதைகளை எழுதி இருப்பவர்களுள் பரீதா இஸ்மாயில், யுவதாரினி செசிலியா முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விடத்தில் விதவைப் பெண்ணின் அவல நிலையை அடுக்கடுக்கான உவமைகள் ஊடாக பின்வருமாறு சித்தரிக்கும் பரீதா இஸ்மாயிலின் கவித்திறன் பற்றி இவ்வேளை குறிப்பிடுவது அவசியம்.

“நிலவின் அழகும் களங்கத்தால்
நிரம்பக் குறைவாய் தோன்றல் போல்
மலரின் இதழ்கள் புயலாலே ...........
........... பொட்டை யழித்துச் சிரித்ததுவே!”

பெண்களது அவல நிலைக்குக் காரணமானவர்கள் பலரை தனது கவிதையில் சாடுகின்ற யுவதாரினி செசிலியாவின் ஆவேசமும் கவனத்திற்குரியது.

அஸ்ரப் எனும் அரசியல் விருட்சத்தை ஆழமாக, நுட்பமாக பதிவு செய்திருக்கிறார் கலை இலக்கிய இளம்சிட்டு ஸப்னா அன்சார் பாராட்டுக்கள். மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.வாழ்த்துக்களுடன்...

பெண்களது காதல் உணர்ச்சியையும் கவிதாயினிகள் வெளிப்படுத்த முற்படுவது 80களிலிருந்தே ஆரம்பிக்கின்றது. ஈழத்திலும் நாட்டார் பாடல் வடிவத்தினூடாக அவ்வுணர்ச்சி வெளிப்படுகின்றது என்ற விதத்திலும் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளுள் முக்கிய மானதாக இருப்பது றமீஸா நௌசாட்டின் கவிதை. அக்கவிதையின் ஒரு பகுதி இவ்வாறு அமைகின்றது.

"கடையாணி கடகடக்க
காளை மணி சலசலக்க
விடியச் சாமத்தினிலே என்னை
விட்டு விட்டுப் ...........
........... தூள் கிளப்பிப் போவது ஏன்"

"செப்பலி குரட்டையோடு
சிணு சிணுக்கும் பனையானும் ...........
........... உண்ட காலடியில் நான் கிடப்பன்"

காதல் உறவு போன்றே நட்புறவினை வெளிப்படுத்துவது பற்றூர் பரமேஸ்வரியின் கவிதை.

இயற்கை அனுபவத்தினை வெளிப்படுத்துகின்றன என்ற விதத்தில் மாஜிதா தவ்பீக், எம்.எஸ்.றஸ்மியா, எ.முபீதா ஆகியோரது கவிதைகள் கவனத்துக்குரியன. இம்மூவருமே தமது மன உணர்வுகளை உண்மையாகவும், மென்மையாகவும் வெளிப்படுத்த முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாதிரிக்கு ஒரு பகுதி

"உன் பார்வையை ரசித்து
உன் கோல விழிகளால் ...........
........... அதனால் தான் என்னவோ?"

அகப் பிரச்சினைகள் தவிர புறப் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்துகின்றனர் இக்கவிதாயினிகள்.

புலப் பெயர்வு ஏற்படுத்தும் பிரச்சினைகளை ஆழமான அவதானங்களுடன் விரிவாக பட்டியல் இடுகின்றது சிவகாமி தேவி எழுதியுள்ள புதைந்த உணர்வுகள்.

போர்ச் சூழல் நிலையிலிருந்து கடந்து போன சம காலத்தில் முக்கியமான தருணத்தில் காணாமல் போன கணவன்மார்கள் பலர். அவ்வாறான பெண் ஒருத்தியின் துயரம் மனதை நெருடும் வண்ணம் மலராவின் "என் பறவை அலைகிறது" கவிதையில் வெளிப்படுத்து கின்றது. அதன் ஆரம்பம் அருமையாக உள்ளது.

"அடிவயிறு கனமாய்

பயம் திரண்டிருந்த

அதிகாலைப் பொழுதொன்றில் ..........

........... என் இனிய பொழுதுகளில்

உன்னைத் தொலைத்திருந்தேன்"

மேலும்; கவிதாயினி சபீனத்துன் நுஹாவின் "மாழட்டும் மழலை தின்னல்" கவிதை மிகக் கச்சிதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறுவர் பிரச்சினைகளும் கவிதாயினிகள் சிலரால் கவனத்துக் குட்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் கல்முனை ஜுல்பிகா ஷரீப், ஹரீஷா சமீம் போன்றோரை குறிப்பிடலாம்.

சூழலியல் பற்றி அவதானித்துப் பலரினதும் கவனத்தினை ஈர்த்திராத நிலையில் அனுஷா அஸீஸ் "கடல் வளம்" என்ற கவிதையில் அது பற்றி பேசுவது முக்கியமானது.

சாய்ந்தமருதில் இருந்தவாறு மலையக மக்களின் வறுமை நிலை கண்டு பொங்குகின்ற கலை மகள் ஹிதாயா றிஸ்வியின் சமூகப் பார்வை வியர்க்க வைக்கின்றது. "உலகமெங்கும் எங்களைப் போல் ஏழைகளுண்டோ" என்ற தலைப்பே அவ்விதத்தில் ஆழ்ந்த முத்துப் போன்றது.

டெங்கு நோய், சுகாதாரத் துறையினரை மட்டுமன்றி கவிதாயினிகளையும் ஈர்த்துள்ளது. பின்வருமாறு சமூகப் பார்வையோடு அது பற்றி அவதானிக்கின்றார் பௌஸியா அலியார்.

"அடுக்கடுக்காய் மாடிமனை

ஆஸ்பத்திரியின் முகவரியாய்

படிந்திருக்கும் ............

............ அங்கே கான்களோ

டெங்குத் தேக்கம்"

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் பற்றி எடுத்துரைப்பது விரிவஞ்சி தவிர்த்துக் கொண்டு கட்டுரையாளர்களுக்கு வருவோமாயின் இத்தொகுப்பிலுள்ள மூன்று கட்டுரைகளும் சந்தேகமின்றி பாராட்டுக்குரியனவாகின்றன. மூத்த தலைமுறையினரான முபீதா உஸ்மான் அவர்கள் தனது கட்டுரையில் "பெண்கள் எதிர் கொள்ளும் சவால்கள்" பலவற்றை நுணுக்கமாக அலசுகின்றார். மட்டக்களப்பு எழுத்தாளர் ஒருவரது நாவலின் சிறப்பினை நறுக்காக எடுத்துக் காட்டுகின்றார். இளம் ஆய்வாளரான வீ.சுஜாழினி, பாரதி பற்றிய தமது கட்டுரையை உசாத்துணைப் பயன்பாட்டினூடாக ஆய்வு நிலைக்கு இட்டுச் செல்கின்றார் கலைவாணி பிரதீபன்.

மென் மேலும் தேடல் அவசியம் என்ற ஒரு குறிப்பினை மட்டுமே கட்டுரை ஆசிரியர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

முற்கூறிய பாராட்டுகளுக்கு அப்பால் கவிதாயினிகளுக்கு கூறுவதற்கு பல உள்ளது.

முற்றத்துக்கு வந்த முகவரிகள் - நெடுஞ்சாலைகளிலும் அறியப்பட வேண்டியது அவசியம் அல்லவா? அவ்வாறெனில் கவிதைகளின் உயிர் மூச்சுக்கள் பற்றியும் (சொற் சேர்வு, சொற் சேர்ப்பு, சொல்லுக்குப் பின்னால் உள்ள நளினம், மௌனம், அதிர்வு) உள்ளார்ந்த ஓசை பற்றியும் கவிதைத் தலைப்புகள், கட்டுரைத் தலைப்புகள் வேறுபாடுகள் பற்றியும் கூட நன்கு சிந்திக்க வேண்டியுள்ளது. அனைத்தையும் விட பெண்ணிலைவாத சிந்தனைகள் பற்றியும் தெளிவு பெற வேண்டியும் உள்ளது. அதற்கான அபாரமான ஆற்றல் இவர்களிடம் நிரம்பவுள்ளது. பெண்கள் என்ற நிலையில் அது பன்மடங்காகவுள்ளது.



# முற்றத்து முதுசங்களின் சிலவரிகள்...

அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் ஜலீல் ஜீயின் ஆலோசனைக்கமைய அம்பாரை மாவட்ட பெண் கவிஞர்கள், எழுத்தாளர்களின் தொகுப்பு ஒன்றினை வெளியிட வேண்டும் என்ற தீர்மானம், அதுவும் 90 நாட்களில் நிறைவேறுவது சிறப்பம்சமாகும்.

இது ஒரு கன்னி முயற்சியாகும். அம்பாரை மாவட்ட பெண் பூக்கள் மலர்ந்துள்ள அழகைக் காண அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். இத்தனை மலர்கள் மட்டுமல்ல அம்பாரைப் பிரதேசத்தில் மலர்த் தோட்டமே இருப்பதை நாம் அறிவோம்.

இதில் அடங்குவது எமது உறுப்புரிமை உள்ளவர்கள் மட்டுமே. இனிவருங் காலங்களில் நிறைவான தொகுப்பைத் தரலாம் என்று கருதுகின்றேன்.

இது அவசர வெளியீடாக இருப்பதனால் அவர்களுடைய திறமையை முழுமையாக தொகுக்க முடியவில்லை. ஆயினும் அனைத்துப் மலர்களும் நறுமணம் வீசும் வாசம் மிக்க மலர்களே என்பதை உணர்ந்துகொள்ள ஆதாரமாக சில அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

சுவைத்து மகிழுங்கள் உங்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் முழுமனதோடு வழங்குங்கள். எதிர்காலத்தில் அவர்கள் ஆக்கங்களுக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

எனது அன்பும் ஆசியும் அவர்களைச் சென்றடைவதாக!


கலாபூஷணம் முகில்வண்ணன்.

(வே.சண்முகநாதன். ஜே.பி)

பொருளாளர்

அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர்

மேம்பாட்டுப் பேரவை



# முற்றத்து முதுசங்களின் சில வரிகள்...

அம்பாரை மாவட்டத்தின் பெண் தமிழ் எழுத்தாளர்களை அவர்களின் ஒவ்வோர் படைப்போடு அறிமுகம் செய்வதாக முற்றத்து முகவரிகள் என்ற பெறுமதி மிக்க பனுவல் ஒன்றை அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை படைத்திருப்பது பாராட்டத்தக்கது.

எமது சோதரிகள் குடும்பப் பிணைப்பிலும் பொதுப் பணியிலும் கட்டுண்டவராக இருந்போதும் இலக்கிய இணைப்புடன் இரண்டறக் கலந்து இன்தமிழ் இலக்கியங்களை யாத்து இலக்கிய வானில் பிரகாசிப்பது புலவலர் இதயங்களில் பூரிப்பை ஏற்படுத்துகிறது.

சமூக மறுமலர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு காத்திரமானதாகும். மானிடப் பண்புகளை மலர்விக்கும் மகத்தான பணி அவர்களைச் சார்ந்தது. அவர்களின் பணியை முன்னிலைப்படுத்தி பேரவைத் தலைவர் தேசமான்ய ஜலீல் ஜீ பேரவைப் பெண் எழுத்தாளர்களின் முகவரிகளை தமிழ் உலகு அறிய வேண்டும் என்பதற்காக இந்நூலை பேரவையின் முதலாவது குழந்தையாகப் பிரசவிப்பது அவரின் இலக்கிய ஆளுமையை இங்கிதமாய் வெளிப்படுத்துகிறது.

தலைமை அன்று மூத்தவர் வசமே இன்றோ
தற்றுணிவும் நேர்மைப் பலவான் உலகறி
கலைபல தேர்ந்த காரியவாதி இளவலிடம்
கைமாறிச் செல்லல் காலத்தின் தேவையே.

கலாபூஷணம் யூ.எல். அலியார் M.A.(Ed)
இலக்கிய ஆய்வுக்கான முதலமைச்சர் விருது (கி.மா)
சிறந்த நூலுக்கான இலக்கிய விருது (வ.கி.மா)
நிர்வாக நிறைவேற்று சபை பிரதிநிதி
அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர்
மேம்பாட்டுப் பேரவை



# ஆசியுரை

## மாவட்ட மேலதிக செயலாளர்

## திருவாளர். கே. விமலநாதன்

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற பெண் படைப்பாளிகளின் ஆக்கங்களை சுமந்து வரும் "முற்றத்து முகவரிகள்" எனும் இலக்கிய சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அக்காலத்தில் பெண்களுக்கென சிலவறையறைகளை அக்கால இலக்கியங்கள் இலக்கணங்களாக வகுத்து வைத்தன. அவற்றின் வழியே அவள் ஒழுக வேண்டும் என சமூகம் எதிர்பார்த்தது. ஆண்மகன் எனில் அவன் எப்பொழுதும் வீரத்திற்கும் வெற்றிற்கும் உரியவன், பெண்மகள் எனில் அவள் வீட்டிற்கு உரியவள் என்பது சமூகவிதியாக இருந்தது. உரிமைகள் பல அவளுக்கு மறுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக "அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு' என கல்வி மறுக்கப்பட்டிருந்தது. மூடத் திருமணத்தால் பெண் வாழ்வு சீர் கெட்டிருந்தது. கைம் பெண்களின் உணர்வுகளை மதியாமல் அவர்களை சமூகத்தில் தாழ்த்தியதோடு அவர்களது உடை, உணவு போன்ற பழக்கவழக்கங்களிலும் கொடூரமான முறையினை கையாண்டனர். கைம்மைக்கோர் மறுவாழ்வு மறுக்கப்பட்டிருந்தது. பெண் என்ற சொல்லே பெரும்பாலும் பெருமைக்குரியதாக கொள்ளப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் இந்நிலை 19ம் நூற்றாண்டில் சிறிதுசிறிதாக மாற்றம் பெறத் தொடங்கியது. 20ம் நூற்றாண்டில் பலர் பெண் விடுதலைக்காக குரல் கொடுத்தனர். பெண்ணியத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் ஆணாதிக்க தளைகளிலிருந்து பெண்களை விடுவிக்க பெரிதும் உதவின. இன்று பல நாடுகளிலும் அதிகமாக பெண்ணுரிமைபற்றியே பேசப்படுகின்றன. மகளிருக்கென சர்வதேச தினமும் அனுஷ்டிக்கப்படுகின்றது. சகல துறைகளிலும் பெண்களுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளன. ஆணுக்கு பெண் நிகரானவள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றைய படைப்பிலக்கிய உலகில் பலபெண்கள் படைப்புக்களை படைக்கின்றனர். பெண்கள் பொதுவான பிரச்சினைகளோடு திரைமறைவில் இருக்கும் அவர்களது பிரச்சினைகளையும் படைப்புகள் ஊடாக வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டும். ஏனெனில் அவர்களது பிரச்சினைகளை ஆண்கள் எழுதுவதைவிட அதனை அனுபவிக்கும் அவர்கள் எழுதுவதே சிறப்பானதாகும்.

எனவே இப்படைப்பாளிகளுக்கு சரியானவகையில் களம் அமைத்துக் கொடுப்பது முக்கியமானதாகின்றது. இந்நிலையில் பெண்களின் படைப்புக்களை வெளியிடுவதற்கென "முற்றத்து முகவரிகள்" எனும் சஞ்சிகை உதயமாவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பிரதேசத்து பெண் எழுத்தாளர்கள் இதன் மூலம் ஊக்குவிக்கப்படுவதோடு அவர்களின் படைப்புக்களையும் இவ்வுலகம் கண்டுகொள்ளும் பேற்றினை அடைவார்கள் என்பதில் மனவுறுதி கொண்டுள்ளேன். இதற்காக என் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



# ஆசியுரை

மேலதிக அரசாங்க அதிபர்

## எம். ஐ. அமீர்

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நூலாக்க முயற்சியில் முதல் வெளியீடாக பேரவையின் பெண்படைப்பாளிகளை அறிமுகம் செய்யும் முற்றத்து முகவரிகளுக்கு வாழ்த்தினை வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

அம்பாறை மாவட்டம் பல்லின மக்கள் நீண்ட காலமாக பரஸ்பரம் நல்லிணக்கத்துடன் ஒன்றுபட்டு வாழும் மாவட்டமாகும் அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் இனங்கள் கலாசார ரீதியாகவும் வாழ்வியல் ரீதியாகவும் ஒருதாய் பிள்ளைகளைப் போன்று வாழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே. இந்த நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் உறவுப்பாலமாக தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை அமைய வேண்டும்.

இலக்கியம் என்பது மனித நேயத்தையும் வாழ்வியலையும் பிரதிபலிக்க வேண்டும். இலக்கியத்துக்காகவே இலக்கியம் என்ற புரையோடிப்போன தத்துவம் இன்றைய நவீன சமுதாயத்துக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை. நாம் படைக்கும் இலக்கியம் மனித மேம்பாடு, மனித நேயம், இன ஒற்றுமை என்பவற்றை இலக்குகளாகவும் இலட்சியமாகவும் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய உயரிய குறிக்கோள்களுடன் எதிர்காலத்தில் இந்த எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை, பயணிக்குமானால் அம்பாறை மாவட்டம் மனித அபிவிருத்தியில் இந்த நாட்டிற்கு ஒரு முன்மாதிரியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப்பேரவை அம்பாறை மாவட்டத்தில் ஆங்காங்கு இயங்கிவரும் இலக்கிய மன்றங்கள், எழுத்தாளர் சங்கங்கள் என்பவற்றையும், மூத்த இலக்கிய வாதிகளையும் உள்வாங்கி இயங்கினால் மேலும் வலுவடையும் என்ற ஆதங்கத்துடன் உங்கள் இலக்கியப் பணிகள் எதிர்காலத்தில் மேம்பட்டு விளங்க வேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

அல்ஹாபிழ் எம்.ஐ. அமீர் (நளீமி)
மேலதிக மாவட்ட செயலாளர்,
*அம்பாறை*



# பேரவைத் தொகுப்பாசிரியரான தலைவரின் இதயத்திலிருந்து...

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் உதயம் பிட்டும் தேங்காய்ப் பூவுமாய் ஒட்டி உறவாடும் உன்னத நிலைமையை சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வின் இணக்கப்பாட்டோடு சங்கமிக்கின்ற சமாதானத்தூதாய் அத்திவாரம் இடப்பட்டதே பேரவையின் முக்கிய பிரதான குறிக்கோள் ஆகும்.

அந்த இலட்சிய பாதை நோக்கிய விடியலில் பெண்ணியத்திற்கான கண்ணியம் வழங்கல் என்ற அடிப்படையில் அதன் முதற் கட்டமாக எல்லோர் நெஞ்சங்களிலும் இடம் பிடிக்க வாழ்ந்து மறைந்த திருமதி கமலாம்பிகை லோகிதராஜா அம்மையார் அவர்களுக்கான கமலதீபம் என்ற சிற்றிதழ் ஒன்றை நினைவேந்தல் மலராக அண்மையில் மிகச் சிறப்பாக வெளியிட்டு வைத்தோம்.

பெண்களுக்கான அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டு ஆணாதிக்கத்தின் நெருடலில் சிறுமைப்படுத்தப்பட்டு அம்மி உருட்டிகளாகவும் அடுப்பூதிகளாகவும் பிள்ளை பெறும் இயந்திரமாகவும் மதிக்கப்பட்டு வந்த ஒரு காலத்தில் அவர்கள் விடுதலைக்கான வேட்கையில் வீர முழக்கம் இட்ட பார்போற்றும் பாவலன் பாரதியார் "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'' என வீராவேசத்துடன் பறை முழக்கினான். அந்த விடுதலையின் உணர்ச்சிக் குமுறலில் விழித்தெழுந்த பெண்ணினம் இன்று சகல துறைகளிலும் ஆண்களை விட தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிச்சயமாக நிரூபித்து காட்டி வருகிறார்கள். இதற்கு பதச்சோறாக பிரித்தானியாவின் இரும்பு பெண் தாட்சர், இஸ்ரேவேலரின் தவப் புதல்வி கோல்டா மேயர், அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டன்,

இந்தியாவின் இந்திராகாந்தி, மியன்மார் ஆங்சாங் சூகி, பாகிஸ்தானின் மலாலா இலங்கையின் இணையற்ற உலகின் முதற் பெண் பிரதமர் ஸ்ரீமா அம்மையார் அவர் அன்பு மகள் சந்திரிகா பண்டாரநாயகா இவர்கள் எல்லோருக்கும் மேலாக உலகில் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அவதியுறும் அப்பாவிகளின் துயர் துடைக்கும் அகல் விளக்காய் ஒளியூட்டிய அன்னை மதிப்பிற்குரிய திரேசா அம்மையார் போன்று சமூக ஜோதிகளாய் பிரகாசித்து மறைந்தும் வாழ்ந்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் மாதர்குல மாணிக்கங்களின் பட்டியல் நீண்டு செல்வதை அவதானிக்கலாம்.

அத்தகைய நாட்டின் இரு கண்கள் என எல்லோராலும் விதந்துரைக்கப்படும் பெண்கள் பற்றிய விழுமியங்களை தரவுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து ஊக்குவிப்பதென்ற உயரிய நன்னோக்கில் சேகரிக்கப்பட்ட விபரத் திரட்டுக்களை ஆவணமாக்கி முற்றத்து முகவரிகள் என்ற தலைப்பில் உள்வாங்கி அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவை வெளியீட்டுப் பிரிவின் ஊடாக வெளிக் கொணர்வதில் அதன் ஸ்தாபகத் தலைவரும் தொகுப்பாளரும் என்ற வகையில் பேருவகையும் பெருமிதமும் கொள்கின்றேன். எமது தொகுப்பிற்கு தரவுகளை வழங்கிய எம் பேரவையின் உறுப்பினர்களான முகவரிகள் முதுமைக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் நிரல்படுத்தப் பட்டுள்ளார்கள்.

இன்னும் எதிர் காலத்தில் பல சமூக முன்னேற்றத் திற்கான ஆக்க பூர்வமான நல்ல பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற எங்களது இலட்சிய பயணத்திற்கு அருள் பாலிக்க வேண்டுமென எல்லோரையும் படைத்தாளும் ஏக வல்லோனைப் பிரார்த்திக்கின்றேன். நன்றி.

தேசமான்ய ஜலீல் ஜீ
நிறுவுனரும், பிரதம செயற்பாட்டாளரும்
அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர்
மேம்பாட்டுப் பேரவை

# வெளியீட்டுப் பிரிவின் சார்பாக

அம்பாரை மாவட்ட எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் அத்திவாரம் சமூகங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை, முரண்பாடுகளை இனங்கண்டு ஒற்றுமைப் பாலத்தை உருவாக்குவதென்ற விழுமிய இலட்சியத்தின் நன் நோக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இப்பேரவையின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

அம்பாரை மாவட்டத்தில் ஆங்காங்கே பரந்து வாழும் எழுத்தாளர்களை சாதி, மத பேதமற ஒருங்கிணைத்து அவர்கள் எல்லோரினதும் ஆளுமை, கலந்துரையாடலின் ஊடாக சமூகத்திற்கு எவ்வாறான பங்களிப்பை நல்கலாம் என்பதை ஆய்ந்து, தெளிந்து செயலாற்றுகின்ற ஒரு கடப்பாட்டை சமூக விழுமியங்களுக்கேற்ப நூலாக்கி வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

அந்த வகையில் 24-09-2015ம் தேதி அன்று இறையடி எய்திய பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி கமலாம்பிகை லோகிதராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம் - ஓய்வு) அவர்களின் மறைவின் ஞாபகார்த்தமாக m d ¢ hu; n g a upy ; "கமலதீபம்" என்ற நினைவேந்தல் மலர் ஒன்றை 27-10-2015ம் தேதி அன்று கல்முனை யாட் ரோட்டில் அமைந்த நால்வர் கோட்ட மண்டபத்தில் அவரின் குடும்ப உறவினர் மற்றும் அனுதாபிகள் மத்தியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக பேரவை உறுப்புரிமை கொண்ட பெண் எழுத்தாளர் சிலரின் ஆக்கங்கள் அவர்கள் பற்றிய தரவுகளோடும் எம் பேரவையின் ஸ்தாபகத் தலைவரும் ஆய்வாளருமான ஜலீல் ஜீ அவர்களின் தொகுப்பில் "முற்றத்து முகவரிகள்"

எனும் நூலாக இதனை வெளியிட்டு வைப்பதில் உளப் புழகாங்கிதம் அடைகின்றோம்.

எதிர்காலத்தில் இலைமறைகாயாக ஒழிந்திருக்கும் இலக்கியத் துறைசார்ந்த எழுத்தாளர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்துமுகமாக விருது வழங்கி கௌரவிப்பதோடு மட்டும் நின்று விடாது அறிவியல் சார்ந்த நூல்களை அடையாளம் கண்டு அவற்றை சமூகத்தின் மத்தியில் வெளிக் கொணரும் கைங்கரியத்தில் ஈடபட உத்தேசித்துள்ளோம். எனவே இம்மாவட்டத்தில் வாழும் சகல எழுத்தாளர்களும் பேரவையில் அங்கத்துவம் பெற்று சமூகத்திற்கான பல நற்பணிகளை அரங்கேற்ற கரங்கோர்த்து ஒத்துழைப்பு வழங்குமாறு பேரவையின் வெளியீட்டுக்குழு சார்பாக வேண்டிக் கொள்கின்றோம்.



கவிஞர் சிவஸ்ரீ பொன்
**சுதந்திரன் குருக்கள்**



கவிப்புனல் சாய்ந்தமருதூர்
**கேயெம்மே அஸீஸ்**



கலைமகள்
**ஹிதாயா றிஸ்வி**

## அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நடப்புவருட நிர்வாகிகள் – 2015/ 2016

தலைவர் ஸ்தாபிதரும், பிரதம ஏற்பாட்டாளரும் : தேசமான்ய ஜலீல் ஜீ - முகாமையாளர் (சம்மாந்துறை)

பொதுச் செயலாளர் : விபுலமாமணி, வீ.ரீ. சகாதேவராஜா உதவிக் கல்விப் பணிப்பாளர் (காரைதீவு)

பொருளாளர் : கலாபூஷணம், முகில்வண்ணன் ஓய்வு நிலை பொறியியலாளர் (பாண்டிருப்பு)

துணைத் தலைவர் : கலாநிதி பரதன் கந்தசாமி கோட்டக் கல்விப் பணிப்பாளர் (காரைதீவு)

துணைப் பொதுச் செயலாளர் : கலாரெத்தினா, ஜுல்பிகா ஷெரீப் ஆசிரியர் (கல்முனைக்குடி)

கணக்குப் பரிசோதகர் : எழுத்தாளர் எஸ்.எல். மன்சூர் ஆசிரிய ஆலோசகர் (அட்டாளைச்சேனை)

## நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள்

கலாபூஷணம். யூ.எல். அலியார் (சம்மாந்துறை)
கலாபூஷணம். அக்கரைப்பாக்கியன் (பெரியநீலாவணை)
எழுத்தாளர். எஸ்.எம். இப்றாலெவ்வை (சம்மாந்துறை)
எழுத்தாளர் அதிபர் - ரீ. தவராஜா (கோளாவில்)
கலாபூஷணம். புன்னகை வேந்தன் (மருதமுனை)
கலாபூஷணம். தம்பிலுவில் தயாநந்தம் (தம்பிலுவில்)
கலாபூஷணம். கலையன்பன் அஸீஸ் (அக்கரைப்பற்று)
ஊடகவியலாளர் எம். தாஜஹான் (பொத்துவில்)
கலாபூஷணம். தி. அன்டனி (நாவிதன்வெளி)
எழுத்தாளர். ஏ.எல்.எம். இஸ்மாயில் (ஆசிரியர்) சம்மாந்துறை
எழுத்தாளர். எம்.யாஸீன் வாவா, கிராம சேவகர் (இறக்காமம்)
ஊடகவியலாளர் ஜெஸ்மி.எம். மூஸா - ஆசிரியர் (மருதமுனை)
ஊடகவியலாளர் எஸ். சிறாஜுதீன் (நற்பிட்டிமுனை)

**நீதிக் குழு :**
ஊடகவியலாளர். எம்.வை. அமீர் (சாய்ந்தமருது)
எழுத்தாளர் ஏ.எம். பறக்கத்துள்லாஹ் (கல்முனை)
எழுத்தாளர் கல்வி அதிகாரி வா. குணாளன் (அக்கரைப்பற்று)

**வெளியீட்டுக் குழு :**
கலாபூஷணம் கவிப்புனல் கே.எம்.ஏ. அஸீஸ் (சாய்ந்தமருது)
கவிதாயினி கலைமகள் ஹிதாயா றிஸ்வி (சாய்ந்தமருது)
கிவிஞர் சிவஸ்ரீ.பொன் சுதந்திரன் குருக்கள் (பாண்டிருப்பு)

**ஊடகக் குழு :**
சிரேஷ்ட ஊடகவியலாளர். எம்.ஏ. பகுர்தீன் (அக்கரைப்பற்று)
சிரேஷ்ட ஊடகவியலாளர். பீ.எம்.எம்.ஏ. காதர் (மருதமுனை)
ஊடகவியலாளர். என். கரன் (ஆலையடிவேம்பு)

**கலை கலாசாரக் குழு :**
எழுத்தாளர் ஏ.ஏ.கபூர் (நற்பிட்டிமுனை)
கலாபூஷணம் பொன் சிவானந்தன் (காரைதீவு)
எழுத்தாளர் எஸ்.என்.எஸ். றிஸ்லி சம்சாட் (அட்டாளைச்சேனை)

**நலன்புரிக் குழு :**
சமூகஜோதி, தேசமான்ய லயன் ஏ.எம்.ஏ. றஷீட் (சம்மாந்துறை)
ஊடகவியலாளர். எம்.ரீ.ஏ. கபூர் J.P. (நிந்தவூர்)
கவிஞர் பூவை சரவணன் (கல்முனை)

**ஆவணப் பதிவாளர் :**
கவிதாயினி எஸ். சிஸிலியா (வீரமுனை)

**தொடர்புகளுக்கு :**

அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை
தென்கிழக்கு பல்கலைக்கழக எதிர்
அம்பாரை வீதி
வீரமுனை - 04
சம்மாந்துறை

0773134818, 0776965343
manaajeafa@gmail.com, vtsaha123@gmail.com

## பேரவை கடந்து வந்த பாதையினை திரும்பிப் பார்க்கையில்...

*(01) 2015-05-10* : முன் ஏற்பாட்டுக் கூட்டம் சம்மாந்துறை அல்-தாஜா ரெஸ்டூரண்ட்ஸில் இடம் பெற்றது.

*(02) 2015-05-16*: அங்குரார்ப்பண கூட்டம் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் 100க்கும் மேற்பட்ட இலக்கியவாதிகளுடன்.
பிரதேச செயலாளர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர், மாவட்ட கலாசார, உத்தியோகத்தர்கள் (மத்தியஅரசு, மகாண அரசு, முஸ்லிம் கலாசாரம், இந்து கலாசாரம், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)

*(03) 2015-05-23* : கவிஞர் அன்பு சண்முகம் இல்லத்தில் - வித்தியா படுகொலை கண்டன கூட்டம்.

*(04) 2015-06-13* : விசேட செயற்குழுக் கூட்டம், காரைதீவு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் - மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் உட்பட 40 இலக்கிய வாதிகள் கலந்து கொண்டனர்.

*(05) 2015-09-13* : ஆலோசனைக் கூட்டம் கலாபூஷணம் U.L. அலியார் சேரின் இல்லத்தில் பேரவையின் மிக முக்கிய ஊர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு நிர்வாகத் தெரிவுக்கான - பொதுச் சபையை கூட்டுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தமை.

*(06) 2015-09-25* : விஷேட பொது நிகழ்வு - பிரதேச சபை கேட்போர் கூடம். அரங்கு - *1* ; ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்புரை (சமய, சமூக தலைவர்கள்) அரங்கு - *2* ; மாண்புறு ஹஜ்ஜுப் பெருநாள் கவியரங்கு (இந்து கவிஞர்களால்) அரங்கு - *3* ; மேம்பாட்டாளர் விருது வழங்கி கௌரவிப்பு

*(07) 2015-10-03* : பொதுச்சபைக் கூட்டம், காரைதீவு பொது நூலக கேட்போர் கூடம் - 75க்கும் மேற்பட்ட மாவட்ட இலக்கியவாதிகள் கலந்துகொண்டு நீதியானதும், நியாயமானதுமான நிர்வாகத் தெரிவினை மேற்கொண்டனர்.

(08) 2015-10-09 : நிர்வாக உபசபைக் கூட்டம் காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றமை.

(09) 2015-10-23 : நிர்வாக சபை, வெளியீட்டு பிரிவு, சேமநலன் பிரிவுகளின் விசேட கூட்டம் கல்முனை நால்வர் கோட்டத்தில் - நினைதல் நிகழ்வு, கமலதீபம் தொடர்பான விடயங்களுக்காக.

(10) 2015-10-27 : பொதுச் சபைக்கான - கல்முனை நால்வர் கோட்டத்தில் இடம்பெற்ற பேரவையுறுப்பினர் அமரர் கமலாம்பிகை நினைதல், நிகழ்வும் "கமலதீபம்" நினைவு மலர் வெளியிடலும் பேராசிரியர் செ.யோகராசா, அதிபர்மணி - பிரபாகரன், கபூர், நினைவுரைகளுடன் இன்னும் பல.

(11) 2015-11-06 : நிர்வாக சபை விசேட கூட்டம் காரைதீவு சண்முக மகா வித்தியாலயத்தில் யாப்புத் திருத்தம் தொடர்பான நிகழ்வு.

(12) 2015-11-25 : வெளியீட்டுப் பிரிவினருடனான கூட்டம், "அம்பாரை மாவட்ட பெண் இலக்கியவாதிகளின் தொகுப்பு" விடயம் தொடர்பாக சாய்ந்தமருது கலைமகள் ஹிதாயா றிஸ்வி இல்லத்தில் இடம்பெற்றது.

(13) 2015-12-04 : வெளியீட்டு, சேமநலம், ஊடகம், நிதிப் பிரிவுகளினதும் நிர்வாக சபை பிரதிநிதிகளுடன் விசேட கூட்டம் "முற்றத்து முகவரிகள்" வெளியீட்டு விழா தொடர்பானவை. சாய்ந்தமருது கலைமகள் இல்லத்தில் நடைபெற்றது.

(14) 2015-12-21 : காரைதீவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பு.

(15) 2015-12-27 : "முற்றத்து முகவரிகள்" வெளியீட்டு விழாவும், கௌரவிப்பு விழாவும்.

தகவல் : ஜீ,
நிறுவுனரும், பிரதம செயற்பாட்டாளரும்.

# கலாபூஷணம்
## முபிதா உஸ்மான்
## - சாய்ந்தமருது



இவர் 1947-01-23ல் கொழும்பில் பிறந்தார். தனது மறைந்த கணவர் மர்ஹூம் ஏ.எல்.உஸ்மான் சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். 25 வருடங்களாக இல. 218, ஒராபி பாஷா வீதி சாய்ந்தமருது 01ல் வசிக்கிறார். பள்ளிப் பருவத்திலிருந்தே எழுத்து, சமூக சேவையில் நாட்டம். 1969 இல் பத்திரிகை உலகில் காலடி பதித்து தினபதி, சிந்தாமணி பத்திரிகை நிறுவனத்தில் உதவி ஆசிரியராக நியமனம் பெற்று இலங்கையின் முதல் பெண் பத்திரிகையாளர், ஊடகவியலாளர் என்ற பெருமையைப் பெற்றார். இக்கால கட்டத்தில் பெண்கள் சம்பந்தமாகவும், பொதுவான தலைப்புகளிலும் பல கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் இப்பத்திரிகைக்கு மட்டுமன்றி வானொலிக்கும் எழுதியுள்ளார். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் (பேச்சு கலந்துரையாடல்) நேரடியாக பங்குபற்றியுள்ளார். அமைச்சர்கள், உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களை பேட்டி கண்டும் எழுதியுள்ளார்.

1976 இல் தகவல் திணைக்களத்தின் பிரசார உதவியாளராக இணைந்து தகவல் தொடர்பு உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்று பல வருடங்கள் கடமைபுரிந்ததோடு இலங்கையில் நடைபெற்ற பல சர்வதேச கருத்தரங்குகள், மாநாடுகளில், செயலகங்களில் கடமையாற்றியுள்ளார். மேலும் பயிற்சிகள், கருத்தரங்குகளில் பங்குபற்றும் பொருட்டு பிலிப்பைன்ஸ், ஹொங்கொங், சிங்கப்பூர், வட இந்தியா, பங்களாதேஷ், யெமன் மற்றும் மேற்கத்திய நாடுகள் சிலவற்றுக்கும் செல்ல சந்தர்ப்பம் இவருக்குக் கிட்டியது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றி யுள்ளார். கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலும் விடுதி

மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார். மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றதன் பயனால் சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து சர்வதேச மருத்துவ குழுக்களில் கடமையாற்றி 2005 ஜனவரியில் சர்வதேச இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தில் அம்பாரை மாவட்ட இணைப்பாளராக, விதவைகள் அநாதைகள் பிரிவு இணைப்பாளராக கடமையாற்றியதுடன் இந்நிறுவனத்தின் பாரிய பணி 2007 இறுதியில் நிறைவுபெற முஸ்லிம் சமாதான செயலகத்தின் அம்பாரை மாவட்ட பிராந்திய பணிப்பாளராக பதவியேற்றார். தொடர்ந்தும் சாய்ந்தமருது அல்றா மேன்பவர் சேவிஸ் அலுவலகத்தில் முகாமையாளராக கடமையாற்றி பலவித சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். சாய்ந்தமருது மத்தியஸ்தர் சபையிலும் அங்கம் வகிக்கிறார். என் கணவருடன் முன்னாள் கல்வி அமைச்சர் மர்ஹூம் அல்-ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் மறைந்த தினபதி ஆசிரியர் எஸ்.சிவநாயகம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள் என நினைவு கூர்கிறார். தற்சமயம் BCAS கல்முனை வளாகத்தில் Marketing Executive ஆக பணி புரிந்து கொண்டிருக்கிறார்.

இவர் பெற்ற விருதுகள்

1. சாய்ந்தமருதின் சிறந்த பெண்
2. அம்பாரை மாவட்டத்தின் இரண்டாம் நிலை சிறந்த பெண்
3. கலாபூஷண விருது
4. முதல் முஸ்லிம் பெண் ஊடகவியலாளர் விருது
5. முதல் முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் விருது
6. சமூகப் பணிக்கான விருது
7. சிறந்த சமூக சேவையாளர் விருது
8. சிறந்த பெண் ஊடகவியலாளர் விருது
9. கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது
10. எழுத்தாக்கத்திற்கான விருதினை சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது

# சவால்களை முறியடித்து வெற்றி பெறுவோம்

உலகம் நுட்ப யுகமாக மாறிக் கொண்டிருக்கிறது. எங்கும் அபிவிருத்தித் திட்டங்கள் கல்வியின் முக்கியத்துவம் எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. அதனை பெற்றுக் கொள்ளும் விதத்தில் வயது வித்தியாசமின்றி ஆண்களும் பெண்களும் அலைமோதுகின்றனர். புதிய புதிய கண்டு பிடிப்புக்கள் சாதனைகள் இடம்பெற்றுக் கொண்டே உள்ளது.

இருந்தும் உலக சனத்தொகையில் பெரும்பகுதி மக்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றனர் சொல்லொணா இன்னல்களை அனுபவிக்கின்றனர். பசிக் கொடுமையினால் வாடுவோர், போதிய உடையின்றி தவிப்போர், வீடில்லாப் பிரச்சினையால் அல்லற்படுவோர் ஏராளம். இவற்றுக்கெல்லாம் மூல காரணம் போதிய கல்வி அறிவில்லாமை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு எனலாம்.

அதனால்தான் கல்வி மற்றும் உழைப்பின் பெருமை ஆண் பெண் இருபாலாராலும் உணரப்பட்டுவிட்டது. அன்று ஆண்கள் கரங்களை நம்பியிருந்த பெண்கள் இன்று தாமும் கல்வி கற்று உழைக்க முன் வந்துள்ளது பெருமைக்குரியதே. கல்வியறிவு அற்றவரும் இன்று சுயதொழிலில் ஈடுபட்டு வருவது போற்றத் தக்கது.

பெண்கள் மென்மையானவர்கள்தான். உண்மையில் பெண்கள் தொழில் செய்யும்போது பலவித சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எல்லா பெண்களுமே திறமைசாலிகள் நுணுக்க மானவர்கள் பொறுமையாளர்தான் திடமான மனம் கொண்டவர்கள் என்று எடை போட முடியாது.

இளம் பெண்களை விட குடும்பப் பெண்களே தொழில் செய்யும்போது பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இருந்தும் தொழில் செய்யும் இடங்களில் இளம் யுவதிகளும் பல விதமான உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர். சக ஆண்களின் நச்சரிப்புக்கு ஆளாகின்றனர். பொது வாகனங்களில் போக்குவரத்து செய்யும் போதும் பல துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகளும் இல்லாமலும் இல்லை. எங்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள். இது இன்று சர்வ சாதாரணம் ஆகிவிட்டது. அது மட்டுமா நவீன தொழிநுட்ப தொலைத் தொடர்பு சாதனங்களால் நையப்புடைக்கப்படுவோர் நிலைவேறு.

பெண்கள் மதிப்புக்குள்ளவர்கள், அவர்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதை பலரும் உணர்ந்து செயற்பட்டால் இப்படியான கசப்புகள் இடம்பெற வாய்ப்பில்லை.

இது இப்படியிருக்க சிலரோ தாம் உழைக்கிறோம் சம்பாதிக்கிறோம் என்ற அகம்பாவத்தில் பெற்றோரின் கஷ்டங்களுக்கு மதிப்பு அளிக்காது தான் தோன்றித்தனமாக மனம் போகும் வழியில் செயற்படுவதை காண்கிறோம். திருமணமான பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

அதே வேளை திருமணமான அதுவும் தொழில் செய்யும் தாய்மாரின் நிலையை எடுத்துக் கொண்டால் அதனை ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. கணவனை பிள்ளைகளை தாய், தந்தை குடும்பத்தினரை கவனிக்க வேண்டிய நிலை உள்ளது. இப்படியான பெண்கள் தொழில் செய்து அதில் வெற்றியும் திருப்தியும் காண்பதென்பது பெரியதொரு சவாலே. கணவனை திருப்திப்படுத்த வேண்டும். பிள்ளைகளை கவனிக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய தாய்ப் பாசத்தை-அரவணைப்பை-பராமரிப்பை அள்ளி வழங்க வேண்டி உள்ளது. குடும்பத்தினரையும் பக்குவமாக நடத்த வேண்டும். வீட்டையும் சமையல் வேலை உட்பட கவனிக்க வேண்டும். இது அவளின் பாரிய பொறுப்பு.

இவ்வாறு பல கஷ்டங்கள் பொறுப்புக்கள் மத்தியில் குடும்பங்களின் நலன்கருதி வெளியில் சென்று தொழில் செய்யும் பெண்களுக்குப் பெற்றார், கணவன், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குவது மிக அவசியம்.

ஆண்கள் தொழில் செய்வதற்கு பெற்றாரும் மனைவிமாரும் எவ்வளவு உதவி செய்கிறார்கள் விழுந்து விழுந்து கவனிக்கிறார்கள். ஆனால் தொழில் செய்யும் மனைவியர் தாய்மாரின் நிலை அந்தோ பரிதாபம். கண் விழித்த நேரம் முதல் படுக்கைக்குச் செல்லும் வரை தன்னலம் கருதாது கணவர் பிள்ளைகள் குடும்பத்தினர் சௌகரியம் கருதி தன் உடலையும் உள்ளத்தையும் வருத்துகிறாள். அவருக்கு ஓய்வு தேவையில்லையா? மற்றவர்களின் விஷேடமான கணவர் பிள்ளைகளின் ஒத்தாசை தேவையில்லையா? சிறு பிள்ளைகள் உள்ள தாயானால் தாய், சகோதரர்கள், மாமி, மைத்துனிமார் உதவி தேவையில்லையா?

எனவே தொழில் செய்யும் பெண்களின் நலனில் அவர்களின் சுகாதாரத்தில் அவர்களின் உளமகிழ்விற்கு அனைவரது பங்கும் மகத்தானது.

அதே வேளை தொழில் செய்யும் பெண்களும் ஆடம்பர வாழ்வுக்கு அடிமையாகாது குடும்பத்தை சீராக நடத்த தம் உழைப்பை பயன்படுத்துவதே மிகச் சிறந்தது.

சில குடும்பங்களில் சில கணவர்மார்களின் சந்தேகப் பார்வையினால் கஷ்டங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் ஆளாகும் பெண்களும் உள்ளனர். இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு குடும்ப பொருளாதார வளர்ச்சி கருதி பெண்கள் உழைப்பதென்பது உண்மையில் பாராட்டுக்குரியது.

எனவே தொழில் செய்யும் மகளிர் நலன் கருதி அவர்களுக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது குடும்பத்தினர் அனைவரினதும் பாரிய கடமை. ஒரு கணவனின் வெற்றிக்கு மனைவியே முதுகெலும்பு என்று பலரும் கருதுகின்றனர். அதே போல் மனைவியின் வெற்றியில் கணவர்க்கு பெரும் பங்கு உண்டு என்பதை மறத்தலாகாது.

எனவே தொழில் செய்யும் மகளிர் நலன் கருதி அவர்களுக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது பெற்றார், பாதுகாவலர், கணவர் மற்றும் குடும்பத்தினர் அனைவரினதும் கடமை என்றால் மிகையாகாது.

அதேவேளை பெண்களும் தாம் உழைக்கின்றோம். எம்மால் தனிக்காலில் நிற்க முடியும் என்ற மனப்பான்மையின்றி பெற்றார், கணவர் அவர் குடும்பத்தினரை மதித்து நடப்பது அவசியம்.

இதுவே தொழில் செய்யும் பெண்களுக்கு அழகும் வெற்றி பெற வழியுமாகும். மேலும் தொழில் செய்யும் மகளிர் தம் சமய கோட்பாடுகளுக்கமைய சீராக உடையணிந்து வெளியில் செல்வது மிக அவசியம். அத்துடன் உயிரினும் மேலானது ஒழுக்கம் என்பதை மனதில் கொண்டு பக்குவமாக மரியாதையுடன் கருமமாற்றல் மிக மிக அவசியம். தம் நடத்தையே தம் குடும்ப கௌரவத்தை பாதுகாக்கும் என்பதை பெண்கள் மறத்தலாகாது. மேலும் பெண்களுக்கு தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், அன்பும் பொறுமையும் மிக மிக வேண்டற்பாடானது. எனவே சகோதரிகளே எதிர்கொள்ளும் பல சவால்களை முறியடித்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோமாக.

## கவிதாயினி

## பற்றூர் பரமேஸ்வரி
## - ஆலையடி வேம்பு



அக்கரைப்பற்று கருங்கொடித்தீவில் குருக்கள் குடி வம்சத்தில் சேனாபதி செல்லம்மாவுக்கும் தம்பிலுவில்லைச் சேர்ந்த தோம்புதோர் சரவணமுத்து கந்தப்பெருமாளுக்கும் 10வது பிள்ளையாக அவதரித்தார்.

இவர் அக்கரைப்பற்று R.K.M. பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை கற்று க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்திடைந்தார்.

இவர் பாடசாலைக் காலங்களில் சரஸ்வதி பூசை, பெரியோர் தினங்களில் பஜனைப் பாடல்கள் பாடுவதில் முதல் நிலையாக திகழ்ந்ததோடு, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பஜனைப் பாடல்கள் பாடி பல பரிசில்களை மிக இளவயதில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் 1964ம் ஆண்டு பொது அறிவு, இலக்கியப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்று ரூபா பத்தினை பெற்றமையை இன்னும் தன் நினைவில் வைத்திருப்பதைப் பெருமையாக கருதுகிறார்.

அக்கரைப்பற்று விபுலாநந்த சபை நடாத்திய கட்டுரைப் போட்டியில் அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகமும், சுவாமி சிவாநந்தா அவர்களினால் வெள்ளிக் கிண்ணத்தையும் பெற்றிருந்தார். மேலும் 1965ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "தமிழ் உலக மாநாட்டில்" திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக தமிழ் புலவர் கா.பொ. இரத்தினம் அவர்களால் வெள்ளிப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் கலை இலக்கிய கலாசாரப் பெரு விழாக்களின்போது தனது பங்களிப்பினை செய்து வருவதுடன் குறிப்பாக கவிதை, சிறுகதைப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களை கடந்த எட்டு வருடங்களாக சுவீகரித்து வருகின்றமையை இங்கு சிறப்பித்துக் கூறலாம். இவர் இன்னும் புகழ் பெற வாழ்த்துகிறோம்.

# என்னுயிர்த் தோழியே...

என்னுயிர்த் தோழியே... என தன்பின் பிரகலா....!
பன்னெடுங் காலம் பதிலேதும் இல்லையடி
பள்ளித் தோழியே...! பாசமுள்ள பைங்கிளியே
கள்ளமில்லா உன் இதயம் சலனமற்ற ஒரு நீரோடை
கல்வியெனும் பூங்காவில் அன்று நாம் பூத்துக் குலுங்கிய புது
மலர்கள்

மல்லிகைப் பூச்சூட்டி மனம் நிறைந்த நகைபூட்டி
கல்விக்கரசி விழா கவின் பெறவே நாமிணைந்து
சொல்லில் தேன் சொட்டும் தேமதுரப்பாட்டிசைத்து
பல்லோரும் போற்றிடவே பாராட்டு மடல் பெற்று
வித்தகன் விபுலாநந்தன் விழாவதனில் நாம்பாடி
புத்தகப் பரிசில் பெற்று புதுமை பல பேசிவிட்டு
பத்தினியாம் கண்ணகியின் கிராமமதை நாம் பார்க்க
மொத்தமாய் வந்தபத்துப் பேர் குழுவினரும்
சித்தமெலாம் மகிழ்வுடனும் சிந்தை நிறை களிப்புடனும்
மதிய நேரத்தில் மலைகள் நிறை காட்சி கொண்ட
கத்தும் குயில் பாடும் கண்ணகி கிராமம் சென்று
முத்தமிழ் விழாவதனில் நாம் முறையாக பாடிவிட்டு
சித்திரைப் புத்தாண்டில் சிங்கார வெற்றியுடன்
சீராக நேராக தோழி உன் வீடு வந்து நாம் சேர

நீ கள்ளியே...! என்று காதைப் பிடித்திழுக்க
நான் துள்ளியே சென்று சகதியிலே வீழ்ந்திடவே
என் வெள்ளை உடையெல்லாம் சேறாக காட்சிதர
மீண்டும் பள்ளத்தில் வீழ்த்தி என்னை பரவசத்தில்

அணைத்தெடுத்து
உன்முல்லைச் சிரிப்பதனில் என்னை மூழ்கியே தவிக்கவிட்டு
என்னைக் கள்ளப் பார்வையுடன் மீண்டும் தண்ணீரில்
மூழ்கடித்து
நல்லை நாதன் வாத்தியார் கைப்பிரம்படி எப்படி இனித்ததடி?
இன்றும் எத்தனை சொல்லி ஏங்கிநிற்பேன் தோழியளே...!

கண்ணகி புரத்திருந்து உனது கடிதமே காணாமல்
இலவு காத்த கிளி போல் ஆனதடி எனது நிலை

கரம் கோத்த முடியுடனே சிரம் தாழ்த்தி மேடைதனில்
கரம் கோத்து சுரம் சேர்த்துப் பாட்டுக்கள் மிகப்பாடி
வீரம் கொள் படையதனில் வெற்றி கொண்ட மன்னனைப் போல்
பூரித்து நின்று புதுமை பல உயர்வு பெற்று
புல்லரித்த வார்த்தை யெல்லாம் செல்லரித்துப் போனதென்று
ஆர்ப்பரித்து வாழ்ந்த நாளை அழுதழுது எண்ணுகின்றேன்

# கலாபூஷணம் பரீதா இஷ்மாயில் - சம்மாந்துறை



சம்மாந்துறை முகைதீன் வாவாப் போடி முகம்மது இஸ்மாயில் போடி (லோட்மேன்) அஹமதுலெப்பை போடி மரியம் பீவி ஆகியோரின் நான்காவது புதல்வியாக பரீதா சம்மாந்துறை பதியில் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார். இவர் தரம் ஐந்து படிக்கும் போதே வானொலி சிறுவர் மலர் நிகழ்ச்சியில் எழுத்து மூலம் கலந்து கொண்டு பல கட்டுரைகள், கவிதைகள் எழுதி அனுப்பியவைகள் அனைத்துமே ஒலிபரப்பானவை இவரின் ஆர்வத்தை மேலும் தூண்டியது எனலாம்.

தொடர்ந்தும் இவர் இளைஞர் மன்றம் எனும் வானொலி நிகழ்ச்சிக்கு தொடர்ந்து ஆக்கங்களை எழுதி ஒலிபரப்பாகியது. பத்திரிகையில் பல கட்டுரைகள், கவிதைகள் எழுதி பிரசுரமாகியுள்ளது. பெண் உலகம் முஸ்லிம் சேவையில் "மாதர் மஜ்லிஸ்", "நெஞ்சோடு நெஞ்சம்", "இளைஞர் இதயம்" போன்ற நிகழ்ச்சிகளில் இவரது சிறுகதைகள், நாடகங்கள் ஒலிபரப்பப் பட்டன.

இவரது நூற்றுக்கு மேற்பட்ட பிரதிகள் "மாதர் மஜ்லிஸ்", "நெஞ்சோடு நெஞ்சம்" நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகி இவரது பெயர் தேசிய ரீதியில் முத்திரை குத்தப்பட்டது எனலாம். இவற்றோடு "மட்டக்களப்பு நாட்டார் பாடல்" என்ற ஓர் விவரணச் சித்திரம் இலங்கை ரூபவாஹினியின் வளர்பிறை எனும் நிகழ்ச்சியில் 1990ல் ஒலிபரப்பாகி தேசிய பெண் கலைஞராக அறிமுக அடையாளமாக்கப் பட்டார். இவர் இலங்கை வானொலி கூட்டுத்தாபனம் நடாத்திய கலைஞர் தேர்வில் சித்தி பெற்ற வானொலி கலைஞர் என்பது இங்கு குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும்.

தனது பாடசாலைக் காலங்களில் பற்பல பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் முதலாமிடத்தை சுவீகரித்து பதக்கம்,

பரிசுகள், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டவராவார். இலங்கையில் மிகப் பிரமாண்டமாக 1968ல் நடைபெற்ற அல் குர்ஆன் 1400 பூர்த்தி விழாவில் "சிறுவர்களுக்கான பேச்சுப் போட்டியில்" முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றிருந்தார். மேலும் இவர் தமிழ்மொழி விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியையாவார்.

இவர் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகளும் சமாதானமும் என்ற பாடநெறியையும், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் வியாபார முகாமைத்துவக் கல்வியையும் அதே தொழில்நுட்பக் கல்லூரியில் "பூ வேலை தையல் துறையிலும்" டிப்ளோமா பயிற்சியை முடித்து சித்தி பெற்றுள்ளார்.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் ஆசிரியையாக கடமையாற்றியவர்.

இவர் 02.07.2006ல் அல்-அமானா முஸ்லிம் பெண்கள் சமூக, அபிவிருத்தி ஒன்றியம் எனும் அமைப்பை உருவாக்கி செம்மையாக தலைமை தாங்கி இன்று வரை சிறப்பாக நடாத்திக் கொண்டு வருகிறார்.

இவரது சமூக சேவையை பாராட்டி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தாலும் கௌரவிக்கப்பட்டுள்ளார். 2008ல் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் "சமூக பராமரிப்பு" மையம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். 2009, 2012 மற்றும் 2013ல் சம்மாந்துறை பிரதேச செயலக பிரதேச கலை கலாசார பேரவை சாஹித்திய விருது வழங்கி பாராட்டி கௌரவித்துள்ளது.

2012ம் ஆண்டில் அம்பாறை மாவட்ட கச்சேரியினால் சர்வதேச மகளிர் தின விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர் இலங்கை மனித அபிவிருத்தி நிறுவனத்தினாலும் (HDO) பலமுறை கௌரவிக்கப்பட்டுள்ளார். இவற்றுக்கும் மேலாக கலாசார அமைச்சு 2014ல் கலாபூஷணம் விருது வழங்கி பாராட்டியது. இவ்விருதினைப் பெற்றுக் கொண்டமைக்காக 2015ல் சம்மாந்துறை பிரதேச கலாசார பேரவையினர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் இலக்கியப் பணி தொடர எம் வாழ்த்துக்கள்.

# அபலைப் பெண்கள் துயர் களைவோம்

முல்லை அரும்பின் ஒளிக்கீற்றாய்
முகிழ்க்கும் மலரின் நறுஞ்சாறாய்
கிள்ளை மொழியின் மென் குரலை
கேட்டே நானும் அதிர்வானேன்
சொல்லும் வகையில் அமையவில்லை
சொக்கும் திங்கள் அவளுடலும்
வெல்லும் வேலும் அவளுடைய
விழியின் வீச்சைத் தாழாதே.

நிலவின் அழகும் களங்கத்தால்
நிரம்பக்குறைவாய் தோன்றல் போல்
மலரின் இதழ்கள் புயலாலே
வாடிச்சிதைந்தே போதல்போல்
புலரும் காலைப் பொழுதினிலே
பொருந்தா ஓலம் கேட்டல்போல்
இளகும் இன்ப யாழ்தொனியும்
இரண்டாய் போன நரம்பாலே

பண்ணொளி மாறி இசைத்தல்போல்
பாவை யவளின் மெல்லுடலில்
மண்ணாய் போன சாத்திரத்தின்
மாண்பு மிகுந்த பரிசான
வெண்மை வண்ண உடையொன்று
வெந்தழல் போல இருந்ததுவே
புன்மை மிகுந்த சமுதாயம்
பொட்டை யழித்துச் சிரித்ததுவே.

கன்னிப் பருவம் வந்திடவே
காதல் வாழ்வு பெறவேண்டி
அன்பை யுடைய பெற்றவர்கள்
அமைத்து வைத்தார் மணநாளை
அன்பன் வந்து கரம்பிடித்து
அமர்ந்து பலரை சுற்றிய பின்
என்பு நோயைப் பெற்றமையால்
இறைவ னடியைச் சேர்ந்திட்டான்.

இறைவா உனக்கிது சகிக்கலையா?
எங்கள் கொழுந்தைப் பறித்தாயே
முறைகள் பலவும் பார்த்துத்தான்
மணநாள் தனையும் குறித்திட்டோம்
கறையாய் அவளைக் காயாக்கி
கனியா நிலையும் சேர்த்தாயே
முறையாய் சடங்கு செய்திருந்தும்
மொட்டு மலரும் வேளையிலே.

வெட்டி அதனைப் பிரிப்பதுபோல்
வேலைப் பாய்ச்சி நெஞ்சினையே
வாட்டி வதைத்துவிட்டாயே
வருந்தி நொந்த பெற்றோரின்
வாட்டம் நீங்கி குறைதீர
வாடா மலரைச் சூடிடவே
நாட்டம் கொண்டோர் வரவில்லை
நலியும் நங்கை வாழ்வுபெற.

நல்ல சடங்கும் உதவவில்லை
நாளும் மாறி நாம்மாறி
இல்லம் மாறி இகம்மாறி
இருக்கும் பொருட்கள் பலமாறி
உள்ளம் மாறா நிலையுளதால்
உடைந்த குங்குமச் சிமிழான
கள்ளமறியா கைம்பெண்ணின்
கண்ணீர் நீங்கும் நிலையிலையோ?

அணிலே சுவைத்த கனியெனினும்
அதனின் சுவையும் குறையாது
கனிவாய் பெற்ற பெண்ணாளே
கணவன் அன்பை அறியாதாள்
நனிமிகு கற்றும் என்ன பயன்?
நங்கையர் விழிநீர் துடைக்காமல்
அணியாய் இன்றே கிளம்பிடுவீர்
அபலைப் பெண்கள் துயர்களைய.

# கலாபூஷணம்

## பௌஸியா அலியார்

## சம்மாந்துறை



சம்மாந்துறையைச் சேர்நத திருமதி பௌஸியா அலியார். நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் ஏகபுதல்வியான இவருக்கு சிறு வயதிலிருந்தே தந்தைவழி பாரம்பரிய கலை இலக்கிய வளம் வாய்க்கப் பெற்றிருந்தது. 5 வயது சிறுமியாக இருக்கும்போதே தகப்பனாரின் பேச்சுத் தொடர்களை அவர் போன்றே பேசுவதற்காக உறவினர்கள் அவரது ஆற்றலைக் குறித்து வியந்திருக்கிறார்கள். சிறு வயதிலிருந்தே மேடைப்பேச்சு, கவிதை புனைதல் ஆகிய துறைகளில் நன்கு பயிற்றப்பட்டு வந்தார். பாடசாலைக் காலத்தில் பேச்சுப் போட்டிகளிலும், கவிதையாக்கத்திலும் கலந்து கொண்டு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுக் கொண்டார். 1970களில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பல நிகழ்ச்சிகளில் கலந்துள்ளார். வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி கவியரங்குகளிலும் கலந்துள்ளார்.

சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றிய காலத்தில் மாணவர்களுக்கு கலை, இலக்கியத் துறைகளில் பயிற்சிகளை வழங்கி வந்தார். தமிழ் தினப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி அவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தார். அத்தோடு மாணவ மன்றப் பொறுப்பாசிரியராகவும் தமிழ் மொழிப் பாட இணைப்பாளராகவும் , பாடசாலைச் சஞ்சிகைப் பொறுப்பாசிரியை யாகவும் பணியாற்றினார். சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலய பாடசாலைக் கீதமும் இவராலேயே இயற்றப்பட்டு சுமார் 15 வருடங்களாக இன்றும் பாடப்பட்டு வருகிறது.

திருமணத்தின் முன்பு பௌஸியா பக்கீர்தம்பி என்ற பெயரே இவரது இலக்கிய முகவரியாக இருந்தது. பின்னர் பௌஸியா அலியார். என்ற பெயரில் சஞ்சரிக்கிறார். இவருக்கு இரு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும் பொதுப் பணிகளில் சேவையாற்றுகிறார்கள். தற்போது இவரது குடும்பம் ஓர் இலக்கியக் குடும்பமாக பரிணமிக்கின்றது. கணவன் கல்வி- இலக்கிய ஆய்வுகளில் ஈடுபடும் பன்னூல் ஆசிரியர். சகோதரர் டாக்டர் பீ.ஏ.நஸீர் ஒரு கவிஞர், புதல்வி ஷெரீன் ஓர் ஆங்கிலக் கவிஞர் கணவர் சம்மாந்துறையின் முதலாவது கலாபூஷணம் விருது பெற்றதுபோல பௌஸியா அலியார் சம்மாந்துறையின் முதலாவது பெண் கலாபூஷணம் என்ற பாராட்டுக்குரியவர்.

தற்போது ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும். தேசியப் பத்திரிகைகளில் கட்டுரை கவிதைகளை எழுதி வருகிறார். சிறுவர் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்ட இவர் 2012 ஆம் ஆண்டில் 'மணி ஆரம்' என்ற பெயரில் சிறுவர் பாடல் தொகுதியை வெளியிட்டார். 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரச இலக்கிய விழாவில் இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவ்விருதினைப் பாராட்டி 2014 இல் சம்மாந்துறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவரது ஆக்க இலக்கியமும், ஆளுமையும் மென்மேலும் எம்மோடு இரண்டறக் கலக்க எம் வாழத்துக்கள்.

# டெங்குத் தேக்கம்

அடுக்கடுக்காய் மாடிமனை
ஆஸ்தியின் முகவரியாய்
படிந்திருக்கும் பராக்கிரமம்
கனவான் மனையாள் கழிவகற்றி
கடுகதியில் கழிவுநீர் பாய்ச்சி
சுகம் பேணும் மான்மியம்
அங்கே கான்களோ
டெங்குத் தேக்கம்

மாடிப் பெண்டிர்
மறைந்திருந்து குப்பைகளை
மதின்மேல் பக்குமாய்
சலார் எனக் கொட்டும்
சாமார்த்தியம்
பாதசாரிகளுக்கு
பகல்வெத்தித் தூவானம்

அக்கம் பக்கமாக
அரைகுறை ஓலைக் குடில்
ஏழைகளின் வாசஸ்தலம்
தாழ்மைப் பண்புடன்
தாழ்வாரம் பெருக்கி
ஆழமாய்ப் புதைக்கும் வழமை
அயலவர்இரவல் நீரில்
அலுவல் முடிக்கும்

அரிய வாழ்க்கை
கழிவுநீர் கழிய
வாசலில் மூடிவிடும் குழிகள்

போர்த்திக் கண்ணயர
வலையில்லை
கொசுவின் கூக்குரல்
தூக்கம் கலைக்கும்
அங்கே
பச்சிளம் பாலகன் முனகல்
பலநாள் படுக்கையில்
கணகணப்புடன்

நன்றி - தினகரன் வாரமஞ்சரி, 10-02-2013

# கவிதாயினி

## யுகதாரினி செசிலியா

## - வீரமுனை



வீரமுனை 4ம் கிராமத்தில் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சலமோன் உத்திரியம்மாள் செசிலியா என்னும் பெயர் கொண்ட இவர் 1954ம் ஆண்டு கார்த்திகை(11) மாதம் 08ம் திகதி பிறந்தார். வீரமுனைக் கிராமத்திலுள்ள இராமகிருஷ்ண சங்க தமிழ் கலவன் பாடசாலையில் 1959ல் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். அவ்வேளையில் ஐந்தாம் ஆண்டிலிருந்தே ஆடல், பாடல், கலைகளில் ஆர்வமுடன் பங்குபற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஐந்தாம் ஆண்டில் வட்டாரப் பரீட்சையிலும், எண் கணிதம் - திறமைச் சித்தியும், தமிழ் பாஷையில் மிகத்திறமைச் சித்தியும், பொது அறிவில் - திறமைச் சித்தியும் பெற்றிருந்தார்.

மேலும் இவர் தொடர்ந்து கல்வி கற்கும்போது பாடசாலை இலக்கிய மன்றங்களில், ஆடியும், பாடியும் தன் திறமையை வெளிப்படுத்தி வந்ததோடு, பாடசாலை படித்து முடித்து, வீட்டிலிருக்கும் போதெல்லாம் நாடகம், நடனம், பாடல் போன்ற பல கலை நிகழ்ச்சிகளைக் தானே தயாரித்து தானும் சேர்ந்து நடித்ததோடு, பல மாணவர்களையும் பயிற்றுவித்து, பல இடங்களில் மேடை ஏற்றியுள்ளார்.அதாவது கோயில் திருவிழாக்கள் பாடசாலைக் கலை மன்றங்கள், மண்டூர், வெல்லாவெளி, காரைதீவு, கோளாவில், முனைக்காடு, சம்மாந்துறை, வீரமுனை, மல்வத்தை, அக்கரைப்பற்று போன்ற இடங்களில், பல சமூக நாடகங்கள், புராண நாடகங்கள்,

நடனங்கள் என்பன மேடை ஏற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அவற்றில் அரிச்சந்திரா, அன்பைத் தேடி என்னும் புராண நாடகமும், சந்தேகம், மனோகரா என்னும் அரச நாடகமும், அம்மாவுக்காக, குடியாத வீடு விடியாது என்னும் சமூக நாடகமும் பலரது பாராட்டைப் பெற்று பல தடவை மேடையேறியுள்ளன. அத்தோடு 1979ம் ஆண்டு தொடக்கம் 2008ம் ஆண்டு வரை சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கணக்கு எழுதுனராகவும், கிளை முகாமையாளராகவும் சேவையும் ஆற்றியுள்ளார்.

அத்தோடு 2012ம் ஆண்டு சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட சாகித்திய விழாவில் "தூய உள்ளம் கொண்டிடுவோம்" என்னும் ஒற்றுமைப் பாடலை தானே இயற்றிப் பாடி பலரது பாராட்டைப் பெற்றதுடன் சான்றிதழும் பெற்றுள்ளார். 2015-05ம் மாதம் நடைபெற்ற முதியோருக்கான போட்டியிலும் தான் இயற்றிய பாடலை பாடி பாராட்டும், பரிசில்களும், சான்றிதழும் பெற்றுள்ளார். மேலும் பிறை FM, சூரிய FM, தமிழ் FM போன்றவற்றில் பல கவிதைகள் எழுதி வாசித்தும் வருகிறார். அத்தோடு முதியோருக்கான வெளியீடு (2015)ல் புத்தகத்திலும் இவரது கவிதைகள் "பெற்றவரைப் பேணுங்கள்" எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இந்து கலாச்சார அமைச்சுக்கு கலாபூஷணம் விருதுக்கும் விண்ணப் பித்துள்ளார். இவரின் முயற்சிகள் நல்ல படைப்புகளாக எம் மத்தியில் உலாவர நாமும் வாழ்த்துகின்றோம்.

# பெண்களின் பாதுகாப்பு

பெண்ணின் பெருமைதனைப் பேசிடும் உலகமதில்
இன்னும் அடக்கு முறையும் வன்முறையும் ஏன்தானோ!
பாலியல் வன்முறையால் பல பெண்கள் வாழ்வுகெட
இன்னுமா பார்த்திருப்போம் இல்லவே! இல்லையடா!

காட்சிப் பொருளாக்கி கடைத்தெருவில் காட்டுவதும்
கிறிக்கட் போட்டிகளில் கீழ்த்தரமாய் உடையணிந்தே
நளினங்கள் காட்டி நடனமாட வைப்பதுவும்
அடுத்தவரை நம்பிப் பெண்ணை அடைக்கலமாய் கொடுப்பதுவும்

பெண்பிள்ளை என்றே! பெற்றவரும் எண்ணாமலே!
பாதுகாக்க வேண்டுமே! என்ற பகுத்தறிவும் இல்லாமலே!
கட்டுப்பாடு தான்மறந்தே! கண்டபடி அலங்கரித்தே!
பெற்றவரும் சமூகமுமே! பெரும் பிழைதான் செய்வதுமேன்?

வறுமையில் வாடும் பெண்ணைச் சிலர் வன்முறையில்
சிக்கவைத்தே!
பணம் கொடுத்துச் சட்டமதை பாதைமாற்றி செயல்படுத்தி
விபரீதமாக பெண்ணை விதம் விதமாய்ப் பழி சுமத்தி
விதியை முடிக்க வைக்கும் வீணர்களை இனங்காணவே!

ஊடகமும் கூட ஊனமாய்ப் போனதுமேன்!
சட்டமும் கூட சதுரங்கமாய் மாறிப்பேச்சே!
மதம், இனம் சொந்தம் காட்டி மறைக்கப்படுகிறதே!
மனித நேயமுள்ள மக்களும் ஏன்? மௌனமாச்சோ?

பாதகச் செயல்பட்ட பாதகரை ஆராய்ந்தே!
அரசாங்கம் தான் அதற்கு அழியாத சட்டமொன்றை
நிலையாக ஏற்படுத்தி நீதிக்கு முன் கொணர்ந்தே!
பாதகரைத் தண்டித்து பெண்களைப் பாதுகாக்க உறுதி
கொள்வோம்.

## கவிதாயினி

## சிவகாமிதேவி முருகமூர்த்தி
## - திருக்கோவில்



இவர் திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மாட்டின் அல்பேட், மங்கயர்கரசி தம்பதிகளின் மகளாவார். சிறுவயது முதற்கொண்டு தனது தந்தையினதும் பாட்டியினதும் தமிழ் நீதிக் கதைகள் புராண வரலாறுகளை, அருட்பாக்களை செவி வழியாகக் கேட்டு வளர்ந்து வந்ததினால் இயல்பிலேயே தமிழார்வமும், கலையார்வமும், பேச்சாற்றலும் நடிப்புத் திறனும் கொண்டவராக இருந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை விநாயகபுரம் மகா வித்தியாலயத்தில் தொடங்கி உயர் தரத்தை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்ததுடன் திருமண பந்தத்தில் இணைந்தார். ஆனால் பாடசாலை நாட்களில் அதிகமாக பேச்சுப் போட்டிகள், சமயப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நாடக நடன நிகழ்வுகளில் பங்கேற்று பரிசில்கள் பெற்றதுடன் முத்திரையும் பதித்துள்ளார்.

திருமண பந்தத்தில் இணைந்து இரண்டு மகன்களை வாரிசாக்கிக் கொண்ட போதிலும் கலைத் தாகம் கொண்ட இவரது எண்ணக்கருவிற்கு கணவரும் உறுதுணையாக அமைந்தார். பாரம்பரிய நாட்டுக் கூத்து கலைஞரும், அண்ணாவியாருமாகிய திரு. சி. முருகமூர்த்தி அவர்கள் அரசுப் பணியாற்றிய காலங்களிலும், பல்கலைக்கழக விழாவிலும், பிரதேசம் சார் கோயில் விழாக்களிலும், சாகித்ய விழா, இலக்கிய விழா போன்றவற்றில் நடைபெறும் நாடக விழாக்களிலும், நாட்டுக் கூத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு முதற் பரிசினை வென்றதுடன் கலையை வளர்ப்பதிலும் அழியாமல் காப்பாற்றுவதிலும் பெரும் பங்காற்றியுள்ளார்.

1980ம் ஆண்டிலிருந்து இக் கலையினை வளர்த்தெடுக்கவும்

நிலைத்திருத்தலில் பங்களிப்பினை வழங்கவும் பெரும் பிரயத்தனங்களினை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் "அரிச்சந்திரா மயான காண்டம்" எனும் இசை நாடகம், "பாசுபதாஸ்திரம்", "தாடகை வதம்", "கெந்தருபன் போர்", "சத்தியவான் சாவித்திரி" நாட்டுக் கூத்துகள் என்பன இவர்களால் இணைந்து தயாரித்து மேடையேற்றப்பட்டு இன்றும் மக்களால் பேசப்படும் கலை வடிவங்களாகும்.

1997ம் ஆண்டிலிருந்து கணவரின் மறைவிற்குப் பின் ஜீவனோபாயத்திற்கென "சுவாட்" அமைப்பில் இணைந்து பணியாற்றிய வேளை அது அவரது திறமைக்கு கிடைத்த ஒரு களமாக அமைந்து விட்டது. அவ்வமைப்பினால் கிடைத்த பயிற்சிகளின் மூலம் செப்பனிடப்பட்டு ஒரு சிறந்த வளவாளராகவும் பரிணாமம் பெற்றார். சமூக விழிப்புணர்விற்காக கிடைத்த மேடைகளை சிறந்த வகையில் பயன்படுத்தி சமூக மேம்படுத்தலுக்காக வில்லுப் பாட்டு, கோலாட்டம், கும்மி, நாட்டுக் கூத்து, கவிதைகள், கிராமிய கலைகளினை ஊடகமாக்கிக் கொண்டு போசாக்கினை மேம்படுத்தல் பெண்களின் பெருமை, பெண்களுக்கெதிரான வன்முறைகள், எச்.ஐ.வி எயிட்ஸ், சிறுவர் அபிவிருத்தி, பால்நிலைச் சமத்துவம், தொழில் முயற்சியாண்மை, சமூக அணிதிரட்டல் போன்ற கருக்களில் நடாத்தப்பட்ட நிகழ்வுகளினூடாக தனது கலைத் தடத்தினை பதித்ததுடன், மேற்கூறிய விடயங்களில் வளவாளராகவும் இருந்து வருகின்றார். அத்துடன் உளவள ஆற்றுப்படுத்துனராகவும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். மேலும் தன்னால் அரங்கேற்றப்படும் அத்தனை கலைநிகழ்வுகளுக்கும் ஆடை வடிவமைப்பாளராகவும், ஒப்பனையாளராகவும் திகழ்ந்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து இக்கலைப் பணியை கொண்டு செல்ல தனது மகன்களான மு. பராந்தகன், மு. விஜயாலயன் ஆகியோரைச் செதுக்கி கலையின் பால் மிளிரச் செய்துள்ளார் என்பதும் பெருமையுடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

## புதைந்த உணர்வுகள்

விளைந்த தேசம் தேடிப் பறக்கின்ற பறவைகள் நாம்
விளைவுகளை அறியாமலேயே விரிக்கின்றோம் சிறகுகளை
கூடு என்னும் அரணுள்ளே குஞ்சுகளும் தாய்களுமாய்
உறவு எனும் கட்டுக்குள் குலவியேதான் வாழ்ந்திருந்தோம்
இடுக்கண்கள் மிக நிறைந்த இல்லறத்தின் துன்பத்தால்
இரை தேட பறக்கின்றோம் இன்னல்களில் மிதக்கின்றோம்

தந்தை தன் குடிப்பழக்கம் தாங்கவொண்ணா வறுமை நிலை
தமையன் தன் பொறுப்பின்மை தங்கையவள் கலியாணம்
தங்க நல்ல வீடில்லை தலைக்கு மேல்தான் கடன் சுமைகள்
உண்பதற்கோ உணவில்லை; உடுக்க நல்ல உடைகளில்லை.
ஊரில் நல்ல தொழிலில்லை உழைக்க வொரு வழியுமில்லை
கௌரவமாய் வாழவென்றே கப்பலேற துணிந்து விட்டோம்

என்னதான் துணிந்திட்டாலும் எண்ண எண்ண வியர்க்கின்றது
பயத்தினால்தான் இதயம் படபடவென அடிக்கிறது
எங்கேதான் போவதோ யாரைத்தான் நம்புவதோ?
நாடி நரம்பெல்லாம் விறைத்தது போல் தெரிகிறது
மனதின் போராட்டமும் மானத்தின் பிரச்சினையும்
வறுமைக்கு முன்பே வெறுமையாய் போய்விட்டது

குடும்பத்தைக் காக்கப்போய் குடியே அழிந்த கதை
மானத்தை இழந்தவர்கள், மாயமாய் போனவர்கள்
மண் குதிரைகளை நம்பி ஆற்றினிலே இறங்கினாற்போல்
முகவர்கள் தனை நம்பி ஏமாந்தோர் ஏராளம்
இத்தனைக்கும் முகம்கொடுத்து வெளிநாடு சென்றபோதும்
சொன்ன வேலையில்லை, குறித்த கூலியில்லை

நேரமின்றி காலமின்றி மாடாய் உழைத்துழைத்து
ஊணற்று உறக்கமற்று உறவற்று சீரற்று
பட்ட பாடெல்லாம் பணமாய் சேர்த்தெடுத்து
அனுப்பிடும் போதெல்லாம் ஆனந்தமாயிருக்கும்
ஐயையோ... வருடங்கள் இரண்டுகளும் உருண்டோடி
அம்பிட்டதெல்லாம் அடக்கித்தான் பெட்டியிலே

அடக்கவொண்ணா சந்தோசங்கள் மனத்திலே சுமந்து கொண்டு
ஆவலுடன் தாய் நாட்டில் அடியெடுத்து வைக்கின்றோம்
பரபரப்பு உபசரிப்பு பார்க்க வராதோரும் ஏராளம்
தாராளமாய் கொண்டுவந்த கையிருப்பும் கரைந்து விடும்
ஏற்கனவே அனுப்பியதில் எள்ளளவும் மிச்சமில்லை
என்னடா வாழ்க்கை என்றேதான் ஒரு வெறுப்பு

வீட்டிற்கு சென்றவுடன் இனித்திரும்பப் போவதில்லை
என்றிருந்த வைராக்கியம் எள்ளி நகையாடியது
மீண்டும் தான் வேதாளம் முருங்கை மரம் ஏறினாற்போல்
அந்தக் கதை தொடர்கதையாய் அடுத்த கப்பல் தானேறி
மீண்டும் வெளிநாடு இயந்திரமாய் வாழும் நிலை
ஊமை கண்ட கனவாக உள்ளுக்குள் போராட்டம்

இப்படியே இவ்வாழ்வும் இனித்துவிடத் தொடங்கியது
பழக்கம்தான் என்றும் வழக்கமாய் மாறுதல் போல்
வந்து வந்து போவதுதான் எமக்கு வாடிக்கையாய் போய்விட்டது
புலம்பெயர் தொழிலாளர் புலம்பலிது என்றாலும்
அந்நியச் செலாவணிக்கு ஆசைதான் எல்லோருக்கும்
இது பொருள் தேடிப் புதைந்திட்ட அவலத்தின் ஆழமிது.

## கவிதாயினி

### மலரா [டாக்டர் புஸ்பலதா]

### - பாண்டிருப்பு



கல்முனை பாரம்பரியமான பண்பாடுகளோடு பிணைந்த பாண்டிருப்பினைப் பிறப்பிடமாகவும் கல்முனை நகரினை வாழ்விடமாகவும் கொண்டுள்ள டாக்டர் கவிஞர் புஷ்பலதா லோகநாதன், தனது மனதிற்குப் பிடித்த "மலரா" எனும் புனைப் பெயரிலே நீண்ட காலமாக கவிதை உலகில் சஞ்சரித்து எழுதி வருகின்றார்.

கடந்த 2009இல் "புதிய இலைகளால் ஆதல்...." எனும் கவிதைத் தொகுதியினை - மலரா கவிதைகள் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையில் வெளியிடப்பட்டது.

போர், சுனாமி, வறுமை பொன்றவற்றிற்கிடையேயான பொதுமக்கள் மீள் கட்டுமானத்தில் தன்னை முற்றிலுமாய் ஈடுபடுத்திக் கொண்டுள்ள சமூக செயற்பாட்டாளர். கிழக்கு மாகாணத்தின் கடந்த இருபது ஆண்டு கால அரசியல், சமூகவியல், ஆய்தலியல் தளங்களிலான அத்தனை மோசமான அனுபவங்களையும் எதிர்கொள்ள நேர்ந்த - நேர்ந்து வருகின்ற ஒருவர், தீவிரமான மற்றும் கூர்மையான படைப்பாளி, தனக்குள் துளிர்த்து மெருகேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்த தன் படைப்பீட்டை இருபது வருடங்களின் பின் அண்மைக் காலத்தில் மீட்டிக் கொண்டு உணர்வின் பச்சை உலராத விதமாக கவிதைகளாக்கிக் கொண்டு வருகிறார். என்பதாக இவரது எழுத்தாற்றல் தொடர்பாக, சரிநிகர் செப்- ஒக் 2007ல் வெளியான சஞ்சிகை தெரிவித்திருக்கின்ற தகவல் மிகவும் பெறுமதியானதாகும்.

இலக்கியப் பொய்கைகளில் நுழைந்து கவிப் பூக்களை நேசித்து வருகின்ற இவர், பல்வேறு சமூக - ஆளுமைமிக்க அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றார்.

அது மட்டுமன்றி டொக்டர் எஸ்.லோகநாதன் அவர்களின் வாழ்க்கைத் துணையான கவிஞர் புஷ்பலதா அன்பான மூன்று பிள்ளைகளின் அன்னையாகி - அழகிய குடும்பத்தில் ஆத்ம நிறைவு கண்டு வரும் இவர் தானொரு வைத்திய அதிகாரியாக கல்முனை ஆதார வைத்தியசாலை, சேனைக்குடியிருப்பு வைத்தியசாலையில் கடமையாற்றி வருவதோடு அத்தொழிலைக் கூட சமூக நலனுக்காக, எழுச்சிக்காக, ஆரோக்கியமான உலகினைக் காணும் ஆதங்கத்தோடு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதை பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லைதான் அதுவே உண்மை.

இலக்கிய உலகில் பல்வேறு அமைப்புகளினால் பல்வேறுபட்ட பட்டங்களையும், விருதுகளையும் வென்றுள்ள எம் மலராவின் பணிகள் இடைவிடாது தொடர்ந்து செல்ல வேண்டும் அதற்காக அனைவரும் இறைவனிடம் பிரார்த்திப்போமாக.

## என் பறவை அலைகிறது

அடிவயிற்றுக் கணமாய்
பயம் திரண்டிருந்த
அதிகாலைப் பொழுதொன்றில்
பூனையொன்று
முன் வாசலைக் கடந்து போன
சகுனத்தின் மிரட்சியில்
நானிருந்த நாளொன்றில்
புதுமணப் பட்டு வேட்டியுடன்
என் வளைக்கரம் பிடித்து
வருவதாகச் சொல்லிப் போன
இறுதித் தருணங்களின் பின்
காணாமற் போயிருந்தாய்
மஞ்சள் மணமும்
பூவின் செழுமையும் மாறாது
மெட்டி ஒலியின் கலவையுடன்
உன்னாக என் உயிரை
சுமந்து பரிணமித்திருந்த
என் இனிய பொழுதுகளில்
உன்னைத் தொலைத்திருந்தேன்
உள்ளாகப் பொங்கிய
வலியின் அலைகள்
- உன்னை
அங்குமிங்கும் தேடி அலைய வைத்தன...
அங்கென்றார்கள்
இங்கென்றார்கள் மனுக்கொடு என்றார்கள்

உண்ணற விரதமிருந்தேன்
மேடைப் பேச்சுக்களில்
கண்டு பிடிக்கப்பட்டு தரப்படுவாய் என்றார்கள்
அப்பா எங்கே எனும் நம் மகனுக்கு
திருமணப் படத்தில்
உன்னை அறிமுகப்படுத்தியிருக்கின்றேன்
உனக்கான தேடலில் என்
பருவங்களில்
பலவற்றை கடந்து விட்டேன்
நெற்றியில் பொட்டிடும் போது
தயங்குகிறேன்
இருக்கின்றாயா?... இல்லையா?...
நம் முற்றத்து மாமரம்
பல தடவைகள்
காய்த்து கனிந்து விட்டது நீ இல்லாமலேயே
மனம் முட்டிக் கொள்கிறது.
வாழ்வின் வழித் தடங்களின்
மேடு பள்ளங்களில்
ஏறி இறங்குகிறேன்
உனக்கான என் தேடல்
தொடர்கிறது
திசை நிறை வான் வெளியில்
என் பறவை
அலைந்து கொண்டிருக்கிறது.

# கவிதாயினி
## மாஜிதா தவ்பீக்
### - மருதமுனை



மருதமுனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாஜிதா தவ்பீக் என்னும் பெயருடைய இவர் திருமணபந்தத்தில் சங்கமித்து அன்பான கணவருக்கும் அருமந்த இரு குழந்தைகளுக்கும் தாயாவார். பிறந்த மண்ணைப் பெரிதாக நேசிக்கும் இவர் சிறுவயதில் இருந்தே இலக்கியத் துறையிலே கால் பதிக்க வேண்டும் என்ற எண்ணம் கருக்கட்ட, 1982ம் ஆண்டில் இத்துறையில் முன்னேற கால்கோளாய் அமைந்த இ.ஒ.கூட்டுத் தாபனம் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரியில் ஒலிபரப்பான "நிலவு", "சீதனம்", "சங்கமம்" என்ற கவிதைகள் காற்றோடு காற்றாய் கானமிசைத்தபோது தன்முயற்சிக்கு முத்தாரம் சூடியதாக மகிழும் இவர் அவற்றைத் தயாரித்தளித்த திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அக்கா அவர்களை அன்போடு நினைவு கூர்கிறார். கன்னிக்கவிதைகளோடு காலூன்றி அங்கீகாரம் பெற்ற இவர் "பூவும் பொட்டும்", "வாலிப வட்டம்", "ஒலிமஞ்சரி", "இலக்கிய மஞ்சரி", "மாதர் மஜ்லிஸ் இளைஞர் மன்றம்", "கவிதைச் சரம்", "குங்குமம்", "பூங்கோதை" ஆகியவற்றுள் சிறகடித்து 156 கவிதைகள் 42 கட்டுரைகள் சில சிறுகதைகள் அரங்கேற்றிய மகிழ்வில் ஆதங்கப்படும் இவர் தினகரன், வீரகேசரி, நவமணி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளையும் நினைவு கூரத் தவறவில்லை. மேலும் பிறை F.M. ஊவா சமூக வானொலி F.M. போன்றனவும் கரம்

கொடுத்து ஆசீர்வதிக்க, "மருதமுனை ஜோதா" என்ற புனைபெயரிலும் ஐம்பதிற்கு மேற்பட்ட ஆக்கங்களை பிரசவித்த களிப்பில் வெளிவந்த கவிதைகளை நூலாக்கி ஆவணபப்டுத்தி அரங்கேற்ற வேண்டும் என்ற துடிப்பில் உள்ளார்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வில்லை என்ற குறளின் கூற்றிற்கு ஏற்ப இலங்கை வானொலி புகழ் அறிவிப்பாளர்களான மறைந்த கலைஞர் இராஜேஸ்வரி சண்முகம், ரி.மயில்வாகனம், மயில்வாகனம் சர்வானந்தா, ஜோகின் பெர்ணாண்டோ, நாகபூசணி, புவனலோஜினி, ஹலிஸ்டாலூக்கஸ், விசாலாட்சி ஹமீட் போன்றோரையும் மறவாது மனதில் இசை மீட்டிக் கொள்கின்றார்.

சோதரி, மருதமுனை ஜோதா அவர்களின் இலக்கியப் பயணம் என்றும் இளமை குன்றாது சமூகத்தின் சல்லடைகளை தோலுரித்து வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டும் என நாமும் வாழ்த்தி வரவேற்று ஆசீர்வதிக்கின்றோம்.

## தங்க நிலவே

நிலவே பெண் நிலவே
உன் பார்வையின் நேசம்
பாரினில் - பாவலர்களுக்கு
கிடைத்த வரம் தானோ?

உன் பார்வையை ரசித்து
உன் கோல விழிகளால்
பூமி மீது நீ கோலமிடும்
அழகை வர்ணித்த
கவிஞர்கள்
ஏன் - உன்னைத்
துன்புறுத்துகிறார்கள்...
ஓ!
நீ ஒரு பெண்ணல்லவா
அதனால் தான் என்னவோ?

மரக் கிளைகளின் இடைவெளியில்
நீ முட்டி மோதி
எட்டி எட்டி ஓடுவது
என்னைக் கிட்டிக் கிட்டி
தேடுவது போல
ஒரு நினைப்பு!

பெண் நிலவே
வேகமாக எங்கு ஓடுகிறாய்...
வழியினில் முகில் கூட்டம் உனை

இடை மறிக்கும்
கவனமாய்...

நிலவே
ஓட்டை வீட்டுக்குள்ளும்
உன் ஒளிக் கதிர்
மெழுகு வர்த்திகளாக
மின்னி மின்னி மறையும்...

நிழல் மரத்தில்
சுழல் காற்று
தாவும் போது
ஒளி நிலவின்
விழிக் கதிர்கள்
அங்கும் இங்கும்
தாவித் திரியும்
மழலைகள் இது கண்டு
ஓடிப் பிடிக்க
முகத்தினில் தெரிந்தது
ஏமாற்றம்

நிலவே! என் திண்ணையில் வந்து
நீ - உட்கார்ந்த போது
வெற்றிலை பாக்கு வட்டா வைத்து
உன்னோடு கூடியிருந்து
கதைத்துக் குலாவிய காலமும்
ஒன்றுண்டு.
நீ ஜன்னலோரத்தில்

ஜாடை காட்டிய போது
என் சின்ன மகள்
உன்னைச் சித்திரமாய்
வரைந்த காட்சியும் உண்டு!

பெண் நிலவே!
நீ - வெகு தூரத்தில் இருந்தாலும்
கற்பனையில் காத்திரமாய்
உனைக் கதை வடித்து
எண்ணத்தில் நிறைக்கின்றோம்!

அமுத நிலவே!
நீ - அருகில் வந்தால்
தூசு பட்டு மாசு பட்டு
மடிந்து விடுவாய்!
எனவே
அங்கேயே இருந்து விடு!

# கவிதாயினி

## கலைமகள் ஹிதாயா றிஸ்வி

### - சாய்ந்தமருது



கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கல்முனை தேர்தல் தொகுதியில் சாய்ந்தமருது கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த "வைத்தியகலாநிதி" யூ.எல்.ஏ.மஜீத், ஸைனப் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான ஹிதாயா றிஸ்வி அவர்கள் கலைமகள் ஹிதாயா, ஹிதாயா மஜீத், நிஷா ஆகிய பெயர்களில் இலக்கியம் படைத்து வரும் எழுத்தாளரும், கவிஞரும் ஆவார்.

இவர் கல்முனை மகளிர் கல்லூரி, பம்பலபிட்டிய முஸ்லிம் மகளிர் கல்லூரி கல்-எலிய அரபிக்கலாபீடம் ஆகியவற்றின் பழைய மாணவியாவார். இவர் வெகுசனத் தொடர்பு சாதன டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார்.

தான் கற்கும் காலத்திலிருந்தே இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவரின் கன்னி கவிதை (புதுக்கவிதை) 1982-04-01 ம் திகதி "மீண்டும்"எனும் தலைப்பில் தினகரனிலும், அதேதினம் "சிந்தாமணி" பத்திரிகையில் "அன்னை" எனும் தலைப்பில் மரபுக்கவிதையும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும். அன்றிலிருந்து இன்றுவரை மூன்று தசாப்தகாலமாக மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, நெடுங்கதை, விமர்சனம், மெல்லிசைப் பாடல்கள் என தவறாமல் எழுதிவரும் இவர் ஆயிரத்திற்கு மேற்பட்ட புதுக்கவிதைகளையும், மரபுக்கவிதைகளையும் எழுதிக் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் படைப்புக்கள் இலங்கை தேசிய பத்திரிகைகளிலும், இந்திய-இலங்கை சஞ்சிகைகளிலும் இடம்பெற்றுள்ளன. இவரது கவிதைகள் தென்கிழக்குபல்கலைகழக தமிழ்துறை மாணவி நிந்தவூர் ஆசிரியை ரிஸ்லா அவர்களாலும், கிழக்குபல்கலைகழக தமிழ்துறை மாணவ ஆசிரியர் முபாரக் அவர்களாலும் ஆய்வுசெய்து ஆய்வேடு சமர்பித்துள்ளனர். பல்வேறு சமூகசேவை, இலக்கியமன்றங்களில் அங்கத்துவம் வகிப்பதோடு மலேசியாவிலுள்ள உலகத்தமிழ் கவிஞர் பேரவையிலும் முக்கிய இடத்தையும் வகிக்கின்றார். இலங்கை வானொலியில் பல நிகழ்சிகளிலும் குரல் கொடுத்துள்ள இவர் ரூபவாஹினிக் கவியரங்கிலும் முதன்முதலில் பங்குகொண்ட முஸ்லிம்பெண் என்ற

பெருமையைத் தட்டிக் கொண்டவர், அத்துடன் இலங்கை வானொலி மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். சிந்தனை வட்டத்தின் 99 வது வெளியீடான "தேன்மலர்கள்" இலங்கையில் முஸ்லிம் பெண் கவிஞர் ஒருவரால் எழுதி வெளியிடப்பட்ட முதல் மரபுக்கவிதைத் தொகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. கலைமகள் ஹிதாயாவின் மூன்றாவது கவிதை தொகுதி "இரட்டை தாயின் ஒற்றைகுழந்தை"எனும் தலைப்பில் சிந்தனை வட்டத்தின் நூறாவது வெளியீடாக வெளிவந்தது. கவிதைத்தொகுதியின் தலைப்புக்கேற்ப இத்தொகுதியினை மஸீதா புன்னியாமீனுடன் இவரும் இணைந்து எழுதியமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் சிந்தனைவட்டத்தின் கவிதைத் தொகுதிகளான" புதிய மொட்டுக்கள்", "அரும்புகளி"லும், காத்தான்குடி கலை இலக்கிய வட்ட வெளியீடான "மணி மலர்கள்" மரபுக்கவிதை தொகுதியிலும், சாய்ந்தமருது நூல் வெளியீட்டுப் பணியகத்தின் வெளியீடான "எழுவான் கதிர்களிலும்" இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவரது இலக்கியப் பணியின் முக்கிய கட்டமாக "தடாகம்" இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டமையைக் குறிப்படலாம். ஒரு பெண்ணாக இருந்த போதிலும் கூட 12 இதழ்களை இவர் வெளிக் கொண்டு வந்தார்.

இவ் இதழ்களில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ஸீ.எல்.பிரேமினி, பேராசிரியர் சு.வித்தியானந்தன், ஏ.யூ.எம்.ஏ .கரீம், கல்ஹின்னை ஹலீம்தீன், புன்னியாமீன் ஆகியோரின் புகைப் படங்களை முகப்பட்டையில் பிரசுரித்து கௌரவித்துள்ளார். சில நூல்களின் வெளியிட்டு விழாக்களையும் நடத்தியுள்ளார்.இவர் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்தாலும் கொழும்பு - வெள்ளவத்தை ஹோட்டல் சபயாரில் நாகபூஷணி கருப்பையா எழுதிய "நெற்றிக்கண்" கவி நூலை வெளியிட்டு சாதனை படைத்தார். ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்ற வகையில் இவரின் பணி பாராட்டத்தக்கது.

# உலகமெங்கும் எங்களைப் போல் ஏழைகளுண்டோ

வான் முகட்டிலிருந்து
கண்ணீர் சிந்தும் மழைத் துளிகள்
வந்தெமது லயங்களுக்குள் வழிந்தோடும்
சோகம் நிறைந்த காட்சியினை காண வாரீர்
உலகமெங்கும் எங்களைப் போல் ஏழைகளுண்டோ?

உடுக்களெனக் கூரையிலே பொத்தலுண்டு
சூரிய ஒளி அவ் வழியில் பார்வை யிட
ஒளி வீசும் கதிர் அங்கே நேரே பார்த்து
தரையதனை முத்தமிடக் காண்பீர் விண்மீன்

குடிசையின் அறைக்குள் தலையைப் போட்டு
தவிக்கின்ற நிலை தென்றற் காற்றிற் கில்லை
இனிமையான சுடர் தன்னை எந்த நாளும்
எம் வீட்டுக்குள் வீசினாலும் ஏற்போம்

வான் முகட்டிலிருந்து கண்ணீர் சிந்தும் மழைத் துளிகள்
வந்தெமது லயங்களுக்குள் வழிந்தோடும்
சோகம் நிறை காட்சியினை காண வாரீர்
உலகமெங்கும் எங்களைப் போல் ஏழைகளுண்டோ?

எங்களைப் போல் ஏழைகள் எவருமில்லை
அல்லாஹ்விடம் கூட எமக்கு கேள்வி கணக்கில்லை
இங்கெமது ஓட்டை லயத்தின் இடத்தைப் பார்த்து
இருக்கின்ற; நண்பர்களும் எமக்குதவி யில்லை.

# கவிதாயினி
## ஜுல்பிகா ஷெரீப்
## - கல்முனை



கல்முனையைப் பிறப்பிடமாகவும், சிறந்த குடும்பப் பின்னணியையும் கொண்ட "தேசமானிய கலாரெத்னா" கல்முனை ஜுல்பிகா ஷெரீப், தனது ஐந்தாவது வயதில் இலங்கை வானொலியின் சிறுவர் நிகழ்ச்சியூடாக கலை இலக்கிய உலகிற்குள் கால்பதித்தார்...

"கல்முனை ஜுல்பிகா ஷெரீப்" எனும் தனது நாமத்திலும், "முனையூர் அன்பு ஜுல்பி", "முனையூராள்", "முனையூர் மல்லிகை" போன்ற புனை பெயர்களிலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கவிதை, கட்டுரை, கதை, நாடகம், விமர்சனம், ஊடகம் என பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்ற இவரது ஆக்கங்கள், இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்து ளிவருகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் வானொலியென பல்வேறு ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன. வானொலி நிகழ்ச்சிகளில் நேரடியாகவும் பங்கேற்று வருகின்ற இவர், நூற்றுக்கு மேற்பட்ட மேடை, வானொலி கவியரங்குகளிலும் கலந்து கொண்டு கவிபாடி மகிழ்வித்த ஒரே பெண் கவிஞர் என்ற பெருமைக்குரியவராவார்.

விஷேட பயிற்றப்பட்ட கல்விமானி, முதுமானி பட்டதாரி ஆங்கில ஆசிரியையாகவும், ஊடகவியலாளராகவும் பணிபுரிகின்ற இவர், தனது பாலர் கல்வியை கல்முனை ஜீ.எம்.ஜீ பாடசாலையிலும், ஆரம்ப, மற்றும் உயர் கல்வியினை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, காமல் பற்றிமாக் கல்லூரி ஆகியவற்றிலும் தொடர்ந்தார். ஆங்கிலம், இதழியல், உளவியல் தொடர்பான வழிகாட்டல், ஆலோசனை போன்றவற்றில் இளமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

பாடசாலையில் "சாரணியம்", பின்னர் "சர்வோதயம்", "தேசிய சேவைகள் மன்றம்" போன்ற அமைப்புகளோடு சேர்ந்து கல்வி, கலை, இலக்கிய, கலாசார, சமூகப் பணிகளை ஆரம்பித்த இவர், "கல்முனை மாதர் பணியகம்", "மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்", "பெண் எழுத்தார்வலர் சங்கம்", ஆகியவற்றின் தலைவியாகவுமிருந்து பணி செய்து வருகின்றார். "கல்முனை கலை, இலக்கிய வட்ட(ம்)"த்தினை 1990ல் ஆரம்பித்து, "சாளரம்", "இறக்கை" எனும் கையெழுத்துச் சஞ்சிகைகளை தொடர்ச்சியாக வெளியிட்ட இவர், 1985ல் "இளநிலா" எனும் காலாண்டு இதழினையும் வெளியிட்டு வந்தார். 1994ல் தனது வானொலி, மேடைக் கவியரங்குகளில் பாடிய கவிதைகளில் சிலவற்றைத் தொகுத்து, "கூவிக் களித்தவை" எனும் பெயரில் வெளியிட்டார்.

1985ல் "கல்முனை புதுயுகம் கலை, இலக்கிய வட்டத்"தின் வெளியீடான "புதுயுகம்" சஞ்சிகையின் போஷகராக இருந்து வெளிவரச் செய்ததோடு இவ்வாறான அமைப்புகளுக்கு பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

கல்முனை அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்த காலங்களில் 1992ல் "The Moon" எனும் ஆங்கில சஞ்சிகையினையும், 1995 லிருந்து 2009 மே மாதம் வரை "குருத்து" எனும் காலாண்டு இதழினையும் கல்லூரி சார்பாக வெளியிட்டு வந்தார். மேலும்... கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்காக "சிநேகம்" எனும் சஞ்சிகையை ஆரம்பித்து வெளிவர உதவினார். கடந்த 24-02-2009 ல் வெளியிட்ட அக்கல்லூரியின் 60 வது ஆண்டு "வைர விழா" நினைவு மலருக்கு ஆசிரியையாக இருந்து பதிப்பித்து வெளியிட்டார். இது தவிர, ஆண்டுதோறும் மலர்கின்ற விஷேட தின நிகழ்வுகளில் அது பற்றிய பிரசுரங்களையும் கவிதையாய் வடித்து வெளியிட்டு வருகின்றார்.

"கல்முனை சமாதான அமைப்பி"ன் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவராக நீண்டகாலமாகப் பணியாற்றிய கல்முனை ஜுல்பிகா ஷெரீப் அம்பாறை மாவட்ட "முஸ்லிம் சமாதானப் பேரவை"யின் உதவிச் செயலாளராக இருந்து இன நல்லுறவுக்கும், சமாதானத்திற்கும் பாடுபட்டு வந்ததோடு..., கல்முனைக்குடி "கிராமோதைய சபைத்" தலைவராகவும், சமாதான நீதவானாகவும் செயற்பட்ட இவர், "தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின்" செயலாளர் நாயகமாகவும், "அம்பாறை மாவட்ட செய்தியாளர் சங்க"த்தின் ஆலோசகர்களில் ஒருவராகவும், பெண்கள் தொடர்பாடலுக்குப் பொறுப்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

அத்தோடு..., "கல்முனை இஸ்லாமிய சமூக சங்கத்தின்" அதியுயர்பீட உறுப்பினராகவும், ஆலோசகராகவும், பெண்கள் பிரிவுக்கு பொறுப்பாகவும் இருப்பதோடு, கல்முனை சிவில் பாதுகாப்புக் குழு மற்றும். பல்வேறு கல்வி, கலை, கலாசார, சமூக, ஊடக அமைப்புகளிலும் இணைந்து அவற்றின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். மட்டுமன்றி.வெளிநாடுகள் பலவற்றில் இடம்பெற்ற கலை இலக்கிய கலாசார நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளமை. குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது. கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் ஆசிரியையான இவர் கல்வி, கலை, இலக்கிய, கலாசார, சமூக, ஊடகப் பணிகள் அளப்பரியதாகும். இதனை உணர்ந்து. 2006ல் "கல்முனைப் பிரதேச சாகித்திய விருதும்" "சாமசிறீ தேசமானி" விருதும், "2009ல் "ஒற்றுமைக்கான உறவுப் பாலம்-2009 விருதும், "நெகனஹிர நவோதய" ஊடக விருதும் தேசிய சேவை மன்றத்தினூடாக சிறுகதைக்கான "ஜனாதிபதி விருதும்", இன்னும் பல விருதுகளும், பதக்கங்களும் வழங்கி பாராட்டப்பட்டதோடு. "கவிக்குயில்", "கலைத்தாரகை", "கவிமணி", கவிநங்கை", "வரகவி", "கலா ஜோதி", "கலைத் தீபம்", "சமூக ஜோதி", "இரத்தின

தீபம்", "கலாரெத்னா" போன்ற பட்டங்களும், நினைவு விருதுகளும் பல்வேறு அமைப்புக்களினால் வழங்கி கௌரவிக்கப்பட்டவராவார் கிழக்கில் "தேசமானிய"விருது பெற்ற முதலாவது பெண்மணியும் இவரேயாவார் இவரது இனிய பணிகள். மென்மேலும் தொடர எமது வாழ்த்துக்களும். பிரார்த்தனைகளும் என்றென்றும் அவருக்கு உண்டு..

## சிறுவர் நலனில் சிரத்தை கொள்வோம் !

பூத்துச் சிரிக்கின்ற
புது மலர்ச் செண்டுகள்
காற்றில் மிதந்து நல்ல
கனிகளைச் சுவைக்க எண்ணும்
வேற்றுமை தெரியாத
விநோதப் பறவைகள்...
நாற்று .. இவர்களுக்கு...
நயவஞ்சகம் சூதுவாது
சேற்றை வாரி இறைக்கும்
செயலெதுவும் தெரியாது...?

வாஞ்சை மிகவுள்ள
வண்ணத் தாரகைகள்...
என்னதான் சாதிமத பேதமெனும்
சாயங்களைப் பூசிடினும்...
மொழி நிற பால்நிலை
மோகங் கொண்டு பார்த்திடினும்
அத்தனைக்கும் அப்பால் நின்று
அன்புக்காய் மட்டும் ஏங்கி
அடிபணிய நினைக்கின்ற
முத்துச் சரங்கள் இவர்கள்...

அன்னவர் வாழ்வினில்தான்
ஐயகோ... எத்தனை கொடுமை
அன்னை தந்தையர்
அணைத்திட்ட உறவுகள்
பள்ளிப் படிப்பு பழகிய
தோழமை.. இன்னும்
சொந்தமென்று சுகங்கண்ட
இத்தனையும் பிரிந்து

ஏங்குகின்ற சிறுவர்கள்
எம்மத்தியில் இன்று ஏராளம்...!
அத்தனையும் இழந்து
அநாதைகளாய் நிற்போரை..
தத்தெடுத்துப்போய் தன்வீட்டு
முற்றம் பெருக்கி முகிழ்ந்திட்ட
அத்தனை செடிகளுக்கும் நீரை
அள்ளியிறைத்து அவஸ்த்தைப்பட்டு
சட்டி மினுக்கி பானை தேய்த்து
சாமான் வாங்க சாலைக் கனுப்புவதால்
புத்தகப் படிப்பு...
புதுப்புது விளையாட்டு
சத்தான ஆகாரம்...
சலனமில்லாத் தூக்கம்...
இத்தனையும் இல்லாமல்
எம்மனித சமூகத்தில்
பற்பல சிறுவர்களின்று
பரிதவித்து நிற்கின்றார்...!

கடைகளில் கூலியாய்
கராஜுகளில் சேவகராய்...
கூடைகள் சுமந்து சென்று
கூவி விற்கும் அடிமைகளாய்...
ஓடைகளில் குளித்து...
ஒருவாய்ச் சோற்றுக் குழைக்கும்
நாட்டின் முதுகெலும்புகள்...
நாளையச் சிற்பிகள்
படுகின்ற கொடுமைகளை
பார்த்திடச் சகிக்கவில்லை..!

பொல்லாப் போர்களும்
புயலும் சுனாமியும்...
சொல்லாமல் வந்திவர் வாழ்வை
சோபை யிழக்க வைப்பதனால்...

வேலைக் காரர்களாய்ச் செல்வர்
வீடுகளில் போய்ச் சேர்ந்து...
அல்லல் படுவதனையும்
ஐயா! யாரிடம் எடுத்துச் சொல்ல...!
பாலும்... பழமும்...
பல்லாக்குச் சவாரியும்
சொந்தப் பிள்ளைக்கே...!
பந்தமில்லாது வந்த இவர்களுக்கோ
பசித்தாலும் வேளைக்கில்லை...
சிலவேளை... சினம் வந்தால்...
சேலையால் கட்டிவைத்து...
செருப்பாலும் அடித்து...
நெருப்பாலும் சூடிடுவார்
நெருங்கி முள்ளாயும் குத்தி நிற்பார்...
சாலையோரச் சிறுவர்களென
சரித்திரம் எழுதி வைக்கும்...!

கல்லுடைத்து மண் நிரப்பி...
கடும்பளுக்கள் நாளும்தூக்கி...
சொல்லடிகள் பட்டு...
சோர்ந்து விழுந்து...
சில்லறைக் காசுக்காய்...
சீரழிகின்றனர் இன்னும் சிலரோ...!

உல்லாச விடுதிகளில்
ஊழியம் செய்வதற்கும்...
கல்நெஞ்சர் சிலபேர்
காட்டுகின்ற லீலைகளுக்கும்...
வில்லங்கமாய் இழுத்துவந்து
விலங்கிட்டு அடக்கிவைத்து...
பிள்ளைகளின் விடயத்தில்
பித்தலாட்டம் செய்வோரை...
கல்லால் அடித்து அவர்

கண்களைத் திறக்கவைப்போம்...!
பிள்ளைகளின் உரிமைகள்
பேசப்படுகின்றதோ...
ஆண்டுக் கொரு தடவை...
ஆனாலும் அவர்வாழ்வு தொடர்கதையே..!

பிள்ளை வளர்ப்போம்...
பெற்றோரில் இருவருக்கும்...
பெரும் பங்குண்டு...!
மற்றவர் பிள்ளைகளையும்
மதித்து அவர் சுதந்திரம்...
பற்றிச் சிந்திக்க வேண்டும்...
பாதுகாப்பு... சேமநலம்...
கருத்துச் சுதந்திரம்
கல்வி மற்றும் பங்குபற்றல்...
வாழ்க்கைத்தரம்... மேம்பாடு...
வழங்கி சிறுவர்களை...
வடிவமைத்து... அழகு செய்வோம்

ஊனமுற்ற சிறுவர்களையும்...
ஊரார் பிள்ளையென்றெண்ணாது
இறைவன் தந்த
இனியதானமாய் எண்ணுவோம்
தலைநிமிர்ந்து அவர்வாழ
தகைமைசெய்வோம்...!
கல்வி... கடமைப்பயிற்சியென்று
சொல்லாலும்... செயலாலும்...
சோடித்து மகிழவைப்போம்...!
செல்வங்கள் எமது நாட்டின் சீர்தூக்கிப் பார்த் தவர்க்கு
நல்லவை நாளும் செய்வோம்
நானிலம் சிறக்கும் அப்போ...!

# கவிதாயினி

## அனுஷா அஸீஸ்

### - சம்மாந்துறை



இயற்கை அன்னையின் அழகும், வளமும் சூழப்பெற்று செழிப்புற்று ஜொலிக்கும் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும், இல 47/ பி, அமிர் அலி வீதி, சம்மாந்துறை எனும் விலாசத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கவிதாயினி அனுஷா சம்மாந்துறை மண்பதி கூறும் கவித்துவப் புலமை பெற்றவர்களின் அடையாளங்களில் ஒன்றானவர் கலாபூஷணம் ஏ - அஸீஸ், எம் - ஹாஜரா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வியை சம்மாந்துறை அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலே கற்றுத் தேறினார். இவர் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே கவிதை, பேச்சு, விவாதம், கட்டுரை போன்ற துறைகளிலும், கலை - இலக்கிய செயற்பாடுகளிலும் அதீத நாட்டம் கொண்டவராக தனது திறமைகளை வெளிக்காட்டியதன் மூலம் தான் கற்ற பாடசாலையின் புகழ் ஓங்க வலுச் சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பிறை F.M. வானொலியின் நிகழ்ச்சிகளிலும், ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளிலும் இவரது கவிதைப் படைப்புக்கு களம் கண்டு தனி இடம் பிடித்துக் கொண்டது.

இவரின் கவித்துவப் படைப்புக்கள் இலங்கையில் வெளியாகும் தேசிய நாளிதழ்கள், வார இதழ்கள், சஞ்சிகைகளிலும்

பிரசுரமாகி அனேகர்களின் பெரும் வரவேற்பினைப் பெற்று வருவதும் சிறப்பம்சமாகும்.

மேலும் இவரது கவிதைகள் "கவிதைத் தூறல்கள்" எனும் நூல் வடிவிலும் 2010ல் வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். 2011 டிசம்பரில் நிந்தவூரின் பிரபல கவிஞரும், சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளருமான ராஜகவி - ஏ - ஸீ - றாஹில் தொகுத்த பிறை எப் - எம் - வானொலியின் "ஒலி மஞ்சரி" நிகழ்ச்சிப் படைப்பாளிகளின் கவிதைத் தொகுப்பான "அன்புடன் பூங்காற்று" எனும் தொகுப்பிலும் கவிதாயினி அனுஷா அஸீஸின் கவிதைகளான "நாட்டின் உயிர் நாடிகள்", "அன்புத் தோழியே", "மீண்டும் ஒருகால் வருமா?", "அன்னையின் பிறந்த நாள்", "கடலலையே", "சிறகுடைந்த பூங்குயிலே", "நோன்பின் மாண்புகள்" போன்றவைகளினூடாக இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தினை செதுக்கிய காரிகையாக தனது வியாபார நிறுவனம், குடும்ப வேலைப் பழுக்களுக்கு மத்தியில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பேனாவை கவிதைக்காய் பற்றுகிறார். இவரின் இலக்கியப் படைப்புக்கள் காத்திரமாய் அமைய எமது வாழ்த்துக்கள்.

## கடல் வளம்

மூன்றெழுத்தில் உன்பெயர்
மூச்சு விடும் உயிர்களோ
எத்தனை கோடிகள்
கண்டு களிப்பதற்கு
உன் வாசல் வந்தால்
இதமான காற்றில் அரவணைத்து
மேனிகளை உரசிக் செல்கையில்
இதயம் தொலைகிறது
சுவாசம் இதமாகிறது
எங்கள் நாசுகளில் ...

உன் பக்கம் வந்திட
கடலலைக்குள்
காலைத்தடவி முத்தமிட்டு
குளிர் மணல்களோடு
நுரைகளை சமர்ப்பிக்கிறாய்
மிகவும் துல்லியமாக ...

பூமியில் காணும்
இயற்கை அதிசயங்களை விட
பல உயிர்களையும் தாவரங்களையும்
முத்துக்களையும் கிளிஞல்களையும்
சேர்த்து வைத்து சிரிக்கிறாய்
நிம்மதியாக ...

உறவுகளை கரையோடு விட்டு
பிரியாவிடை பெற்று
இறைவனை பிரார்த்தித்து

தன் உயிர்களை உன்னிடம் அர்ப்பணித்து
தோணிகள் ஏறி
உன் மடிதேடி வலை வீசி
இராப்பொழுதினில் மக்களுக்கு
இரைதேடி நாடுகையில்
வாஞ்சையோடு அள்ளிக்கொடுத்து
வழி அனுப்பி வைத்து
ஆனந்தக் களிப்பினில் நீ முத்தாட
இரையோடு கரைசேரவைக்கும்
சிறப்பை என்னசொல்வது ...

ஏழைகளின் பசி தீர்த்து
வருமானத்திற்கு வழி அமைத்து
நாடி வரும் மக்களை
அரவணைத்து
யாசகத்தை விரட்டி
செல்வந்தர்களாய் மாற்றுகின்றாய் ...

கம்பளம் விரித்த மேடையில்
அலையோடு ஆடி அசைந்து
ஆகாயத்தை தொடும் பாசாங்கில்
பௌர்ணமியை சாட்சி வைத்து
பூமியை குளிரச் செய்து
வசந்தம் நாடி வருவோர்க்கு
கவலைகளை துடைத்து
உன் அதிசயங்களை பேச வைக்கிறாய் ...

உன் செல்வம் அளப்பரியது
அதை ரசிப்பதும் ஓர் சிறப்பியல்பு
மூன்றெழுத்தில் உன் மூச்சு
என்றும் வேண்டும் உன் பேச்சு.

# கவிதாயினி

## ஹரீஷா சமீம்

### - மருதமுனை



மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் ஹவ்லத் தம்பதிக்கு முதல் மகளாக 1980.09.06ம் திகதி மருதமுனையில் பிறந்தவர் ஹரீஷா. தற்போது 184ஏ, மஜ்ஜிதுல் அக்பர் வீதி, மருதமுனை - 01 எனும் விலாசத்தில் வசித்து வருகிறார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி கற்றவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியையும்,இலங்கை நூலக சங்கத்தின் நூலகர்(தரம்-1) டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

மருதமுனையின் முதல் பெண் நிருபராக சுடர் ஒளி பத்திரிகை மற்றும் தினக்கதிர் பத்திரிகைகளில் கடமையாற்றி யுள்ளார். கல்முனை, மருதமுனை பொத்துவில் ஆகிய நூலகங்களில் கடமையாற்றி தற்போது துறைநீலாவணை பொது நூலகத்தில் நூலகராகக் கடமையாற்றுகின்றார்.

சிறுவயதிலேயே கலை இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டதன் காரணமாக 2000ம் ஆண்டில் "உன்னை மட்டும்"என்ற கவிதையின் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். தினகரன், செந்தூரம், நவமணி,தினக்கதிர், இடி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும். வானொலி நிகழ்ச்சிகளிலும் கவிதைகளை எழுதியுள்ளார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளையும்,பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் அனைத்தும் சுனாமி அனர்த்தத்தில் அள்ளுண்டு போனமை கவலைக்குரியதே. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்,அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் உள்ளார். ஊடகவியலாளரும், கவிஞருமான அப்துல் ஜப்பார் சமீம் அவர்களைத் திருமணம் செய்துள்ள இவருக்கு இரண்டு பெண்பிள்ளைகள் உள்ளனர்.

இவர் எழுதிய கவிதைகளை விரைவில் நூலாக வெளியிட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தை மனம்

இந்த வண்ண வண்ண
வளையல்கள் எல்லாவற்றையும்
உனக்குத் தந்து விடுகிறேன்.
என்னுடைய அழகிய
எல்லா பாதணிகளையும்
நீயே எடுத்துக் கொள்.

நான் கொஞ்சி மகிழ்கின்ற
குழந்தையைப் போல்
பார்த்துப் பார்த்து ரசிக்கும்
எல்லா பொம்மைகளும்
உனக்கேதான்.

இன்னும் என்னுடைய
எல்லா விளையாட்டுப் பொருட்களும்
உன்னிடமே இருக்கட்டும்.

இவை எல்லாம் அடிக்கடி
நீ எனக்கு
வாங்கிப் பரிசளித்தவைதான்.

இதில் எதுவுமே
இனி எனக்கு வேண்டாம்.

இனிமேல் ஒருநாளும்
உன்னை கரச்சல்படுத்த மாட்டேன்.
அடம்பிடிக்க மாட்டேன்
அழக்கூட மாட்டேன்
எதுவும் வாங்கிக் கேட்க மாட்டேன்
ஆனால் ஒன்றேயொன்று உன்னிடம்
நீ இன்னுமொரு
திருமணம் முடித்து விடாதே.

போன வாரம்
என் மகளின் தோழியின் உம்மா
திருமணம் முடித்திருந்தாள்.

## கவிதாயினி

## எம்.எஸ். றஸ்மியா

## - வரிப்பத்தான்சேனை



இயற்கையின் அழகும், வளமும் செழிப்புற்று விளங்கும் வரிப்பத்தான்சேனை எனும் பதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கவிதாயினி முஹம்மட் சஹீட் றஸ்மியா ஆரம்பப் படிப்பும், உயர்தரப் படிப்பும் வரிப்பத்தான்சேனை அல்-அமீன் வித்தியாலயத்தில் கற்றார்.

இவர் பாடசாலைக்காலம் தொட்டு எழுத்துத் துறையில் ஆர்வம் காட்டி வருகிறார். இவர் தனது படைப்புக்களை கவிதையாகவும், சிறுகதைகளாகவும், கட்டுரையாகவும் வெளியிட்டு தனக்கென ஓர் அடையாளத்தினை உருவாக்கியுள்ளார்.

இவரது படைப்புக்கள் ஊவா சமூக வானொலியிலும், வசந்தம் F.M., தென்றல் போன்ற வானொலிகளில் ஒலிபரப்பப்பட்டதுடன் வசந்தம் தொலைக்காட்சியிலும் ஒளி-ஒலி பரப்பப்பட்டமை சிறப்பம்சமாகும்.

மேலும் இவரது கவிதைகளும், சிறுகதைகளும் "கீறல்" சஞ்சிகையிலும், "மண் வாசனை" சஞ்சிகையிலும், இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும் பிரசுரமாகி பெரும் வரவேற்பினை பெற்றிருந்தது.

மேலும் 2012/13 ம் ஆண்டுக்கான மலையக கலை, கலாசார சங்கம் "இரத்தின தீபம்" வழங்கியதுடன் தேசிய கௌரவ பட்டம் வழங்கும் நிகழ்வில் "கலைத்தீபம்" பட்டத்தினையும் வழங்கி பாராட்டி, கௌரவப்படுத்தியது. எமது பேரவையின் செயற்பாட்டு பிரதிநிதியாக இருந்து மேலும் இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே இவரது அவாவாகும்.

## மனதை மீட்டும் மழையழகியே....

முகில்களால் முக்காடிட்ட
மழையழகியே - உன்
முகத்திரை நீக்கிய போது
எங்கள் அகத்திரை குளிர்கின்றன

நீ சோவென பொழியும்
போதெல்லாம் மேகம்
நீர் நரம்புகள் மீட்ட
ஊரே ஈர ரசனையில் நீந்த
இதயப் பூமியில் நேசப்
பூக்கள் பூக்கின்றன

திட்டு திட்டாய் வந்து
முட்டிக் கொண்ட மேகமே
வீதிகளை வெள்ளந் தழுவ
வயல் வெளிகள் சமுத்திரத்துடன்
பேச பூமியை கழுவி
உயிர்களுக்கு புது சுவாசம்
வழங்குகின்றாய்

மழையே மனசும்
உடலும் உன்னால் தானே
நனைந்தது குளிர் வாசம்
எம்மை நேசிக்க
உயிர்களின் இதயங்களில்

மகிழ்ச்சி மடல் வரைகிறாய்
உன் வெள்ளைப் புன்னகையால்

நீ பொழியும் மழையில்
நீ பொழியும் அழகில்
எம் மனங்கள் நிரம்புகின்றன
செல்ல மழையே

சின்ன சின்ன குளிர்பழம் - நீ
தேசம் உண்ணும் புனிதகனியும் - நீ
அழகு தென்றலாய் பூமியின்
வேர்வரை புகுந்து புகுந்து
இளமையாகவே வைத்திருக்கிறாய்
உலகை உன்னைப் போலவே

மழையே
நீ இல்லை என்றால்
உயிர்களில்லை
பயிர்களில்லை
அழகுமில்லை
வான் மழையே வா
உயிர் நனைந்து இறங்கு

## கவிதாயினி

## சபீனத்துன் நுஹா

## - சம்மாந்துறை



சம்மாந்துறையைச் சேர்ந்த இயல்பாகவே கலையார்வம் மிகுந்த குடும்பமொன்றிலிருந்து தோற்றம் பெற்றவர் தான் சபீனத்துன் நுஹா என்ற இளம் கவிதாயினியாவார். சபீனா கோல்ட் ஹவுஸ் உரிமையாளர் கே.எல்.இஸ்மாயில் ஹாஜியார், எம்.எம்.சாலிஹா உம்மா ஹாஜியானிகளின் சிரேஷ்ட புதல்வியும், டாக்டர் ஏ.ஆர்.நியாஸ் அஹமட் அவர்களின் இனிய துணைவியுமான சபீனத்துன் நுஹா தனது பாடசாலைக் காலத்திலிருந்தே கலை இலக்கிய இரசனையும், இலக்கியம் படைப்பதில் ஆர்வமும் உள்ளவராய்க் காணப்பட்டார். இரண்டாயிரமாம் ஆண்டளவில் கவிதையை தனது துறையாக வரித்துக் கொண்ட நுஹா இன்றைய காலகட்டத்தில் தினசரிகள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள், சமூக வலைத் தளங்கள் போன்றவற்றில் ஏராளமான கவிதைப் படையல்களின் சொந்தக்காரியாகி விட்டார் எனலாம்.

இவர் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், க.பொ.த. (உ/த) விஞ்ஞானத் துறைக் கல்வியை சம்மாந்துறை அல் - மர்ஜான் மகளிர் கல்லூரியிலும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலும் மற்றும் சன்மார்க்கக் கல்வியை அஸ் - ஸாலிஹாத் முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரியிலும் மௌலவிப் பட்டம் பெற்று முதலாமவராக தெரிவாகியமை இங்கு சிறப்பம்சமாய் குறிப்பிடலாம்.

இவரது கன்னி முயற்சியாக தினகரன் புதுப்புனலில் (2000) பிரசுரமானது. "பெண்ணாய்ப் பாரும்" எனும் கவிதை இதன் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமான சபீனத்துன் நுஹா அதிகமான கவிதைகளை பிரசவித்துக் செய்து கொண்டே இருந்தார்.

தனது இலக்கிய நகர்வுகளை சம்மாந்துறையில் இயங்கிய அமைப்புகளான, கலை இலக்கிய தேனகம், சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம், அஸ் - ஸாலிஹாத் அரபுக் கல்லூரியின் பழைய மாணவியர் ஒன்றியம் போன்றவற்றில் தனது ஆளுமைக் குவியலை செலுத்தி வருகிறார்.

இவர் சம்மாந்துறையின் வரலாற்றில் பெண் இலக்கிய வாதியின் முதலாவது ஆவணமாக்கப்பட்ட படைப்பாக 2007ல் "புள்ளியைத் தேடும் புள்ளிமான்" எனும் கவிதைத் தொகுதியினை வெளியிட்டு வைத்து புளகாங்கிதமடைந்தார். அண்மைக் காலமாக இவரது பேனா சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. மீண்டும் அவர் இலக்கிய தடாகத்தில் அதிர்வினை ஏற்படுத்தியமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவரது படைப்புக்களை மென்மேலும் நாம் நுகரும் வாய்ப்பினை வழங்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

## மாழட்டும் மழலை தின்னல்

ஒரு மெலிதான அலறலின்
கோர இரைச்சலை - நான்
அருகில் மற்றும் வெகு தொலைவுகளில்
செவியூன்றியதாகவே
இருதயம் இறுக்கிப் பாய்கிறது

மன வலியின் முனகல்கள்
சுவர்களில் மற்றும்
சுழித்துப் பாயும் சிவந்த
நதிகளில் திணறிய தாய் அப்பாலுற்றன.

மடக்கி மடக்கி நெழிந்து
படரும் வயற்காட்டின்
ஆழ் பிளவுகளில் - எளிய
வண்ணாத்திப் பூச்சியொன்று
சுமக்கவொண்ணா கனதியின்
அழுத்தத்தில் விண்ணோக்கித்
தப்பிச் சென்றிருக்கலாம்
அலைகளை அதிர வைக்கும்
கோர இரைச்சலுடன்

இது முற்றுப் பெறுவதாயில்லை
மது நெடியுடன் கூடிய
மென்மையான சிறகு நுனிகளை
நாம் பார்வையூன்றுவதற்கென்றே
ஜன்னலோரங்களில் தாவிச் செல்கிறது

தீக்கங்குகளைக் கக்கித் திரியும்
தென்றலின் தாயுள்ளம்
அத்தனை பலவீனமுற்றதா
பாதுகாப்பு வலயங்கள்?
இருதயங்களின் இறுக்கங்கள்
குரல் வளையை நசுக்குவதில்
இரைச்சலின் அபரிமிதம்
ஈரற்குலையின் நடுக்கம்
அதல பாதாளத்தில் மேல் நோக்கித்
தாவும் பிஞ்சுக் கனவுகளின்
அடக்கஸ்தலங்கள் - முடிச்சிட்ட
கயிறுகளைப் பலப்படுத்த வேண்டி நிற்கின்றன
மன்னிப்புக்கு அளிக்கப்படும்
மரண தண்டனையில்
குருத்துச் சாம்பல்களில் ஊர்ந்து
கடந்து செல்லும் அரவங்கள்
சுருண்டு மடங்கி
தொலைந்து மறையும்.

# கவிதாயினி

## றமீஸா நௌசாட்

## - சம்மாந்துறை



சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூம்களான முஹம்மது இஸ்மாயில், அலிமா உம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியாக றமீஸ் நிஷா பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சது/ அல் - முனீர் வித்தியாலயத்தில் கல்வி கற்று இடை நிலைக் கல்வியை சது/ அல் - மர்ஜான் மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

இவர் பாடசாலை பராயத்தில் மிகவும் சுறுசுறுப்புடன் பற்பல கலை இலக்கிய நிகழ்வுகளில் அதி தீவிர ஆர்வத்தினை காட்டியுள்ளதோடு பல பரிசுகளையும் சான்றிதழ்களையும் தன்னகத்தே சுவீகரித்து தனது பாடசாலையின் நாமத்துக்கு புகழை ஈட்டிக் கொடுத்த மாணவியாக வலம் வந்திருந்தார்.

இவர் திறந்த பல்கலைக் கழகத்தில் முன் பள்ளி ஆசிரியைகளுக்கான டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்ததோடு முன் பள்ளி ஆசிரியைகளுக்கான Level III சிங்கள மொழி கற்கை நெறியையும் முடித்து தேசிய பாலர் பாடசாலை அபிவிருத்தி மன்றத்தினால் நடாத்தப்பட்ட முன் பள்ளி ஆசிரியைகளுக்கான டிப்ளோமா பயிற்சி நெறியையும் சிறப்புடன் சித்தியெய்தி பல தகைமைச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

இவற்றுக்கு மேலாக நவஜீவன புனர்வாழ்வு அமைப்பினால் வலது குறைந்தவர்களுக்கான உள்ளீர்க்கப்பட்ட கற்பித்தல் முறைமை ஆசிரியர் பயிற்சி, சமூக சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட ஒரு வருட கால சமூக சேவைக்கான பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, பிள்ளை உளவியல், முகாமைத்துவப் பயிற்சியினை பெற்று பத்து வருடமாக முன் பள்ளி ஆசிரியையாக கடமையாற்றி வருகிறார்.

தன் வாழ் நாளில் தான் ஆளுமை நிறைந்த பெண்ணாக

வாழ வேண்டும் என்ற குறிக்கோளின் காரணமாக NAITA கல்வி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட முன் பள்ளி உதவி ஆசிரியைகளுக்கான பயிற்சி நெறி, தமிழ், ஆங்கில தட்டச்சு, கணினி, உதவி தாதி கற்கை நெறிகளை பூரணத்துவமாக பூர்த்தி செய்துள்ளார்.

றமீஸ் நிஷா தனது வாழ்க்கைத் துணையாக பிறை எப் - எம், மற்றும் தனியார் வானொலி புகழ் அறிவிப்பாளர் ஏ.ஸீ.நௌசாட்டை கரம் பிடித்தார். அவரின் உந்துதலினாலும், ஒத்துழைப்பினாலும் தனக்கு கிடைக்கின்ற குறுகிய ஓய்வு நேரங்களை கவிதை, சிறுகதை, சாஸ்திரீக பாடல், கர்நாடக சங்கீதம் போன்ற கலை இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட ஒதுக்குவது பாராட்டுக்குரியதே.

இவர் கலைத்துறையில் குறிப்பாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், லக்ஸ்டோ மீடியா நெற்வேர்க்கினால் நடாத்தப்பட்ட 'இளைஞர் விருது - 2010''க்கான கலை கலாசார மாவட்ட மட்ட போட்டியில் அறிவிப்பாளர் போட்டியில் மூன்றாமிடம் பெற்றமை மற்றும் ஊடக கற்கை நெறியில் டிப்ளோமா தரச் சான்றிதழ் பெற்றமையையும் இங்கு சுட்டிக் காட்டலாம்.

மேலும் இவரது திறமைக்கு மதிப்பீடாய் தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட பிரதீபா - 2010க்கான நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட தேசிய மட்டத்திலான சாஸ்திரீக குழுப்பாடல், கர்நாடக சங்கீதம் மற்றும் புதிய பாடலுக்கான போட்டிகளில் முதலாம் இடங்களினை சுவீகரித்து வெற்றிப் பதக்கங்களை தனதாக்கிக் கொண்டவர்.

தனது ஆளுமையை கவிதை, சிறுவர் பாடல்கள், சிறுகதை போன்றவற்றில் செலுத்தியதுடன் நேத்ரா தொலைக்காட்சியில் ஒலிபரப்பான "உயர்ந்தவர்கள்", "தலாக்" போன்ற இஸ்லாமிய நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தமையும், குரல் கொடுத்தமையையும் சில இஸ்லாமிய குறுந் திரைப்படங்களில் பாத்திரமேற்று நடித்து வரும் இவ்விள நங்கைக்கு எமது வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

## ஆத்துப் பக்கம் போற மச்சான்

மாட்டுவண்டி பூட்டிக்கிட்டு
மாடு ரெண்டும் கட்டிக்கிட்டு
மம்மது நீ போகையிலே...
மயங்குதுகா என் மனசு...

கடையாணி கடகடக்க
காளை மணி சலசலக்க
விடியச்சாமத்தினிலே என்னை
விட்டுவிட்டுப் போவதெங்கே...

மச்சானே, மம்மதுவே
மாமிமகள் என்மனதோ
துடியாய்த் துடிக்கையிலே
தூள்கிளப்பி போவது ஏன்...

ஆத்துப்பக்கம் மண்ணேத்தி
அழகாய் உடை உடுத்தி
வேர்த்து விருவிருக்க நீ
விரைவதுவும் ஓரழகு
செப்பலி குரட்டையோடு
சிணுசிணுக்கும் பனையானும்
ஆத்துல கிடக்காமே
பிடித்துவாகா ஆக்கித்தாறேன்

சின்னொரு தாலியேனும்
சீக்கிரமா நீயுழைச்சி
கழுத்தில போட்டாத்தான் என்ர
கக்கிஸங்கள் தீரும்மச்சான்...

உன்னத்தான் நம்பியுள்ளேன்
ஒருபோதும் விட்டுடாத
கண்ணேபோல் காப்பேன் மச்சான்
உண்ட காலடியில் நான்கிடப்பன்...

## கட்டுரையாளர்

### கலைவாணி பிரதீபன்
### - விநாயகபுரம்



தம்பட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். தற்போது விநாயகபுரத்தில் வசித்து வருகிறார். தனது ஆரம்பக் கல்வியை தம்பட்டை அ.த.க. பாடசாலையிலும், உயர்தரக் கல்வியை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றவர். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் (2004இல்) 3A அதி விசேட சித்திகளைப் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் தெரிவானார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையின் தமிழ்துறையை விசேட துறையாகத் தேர்ந்தெடுத்துக் கற்ற இவர், "சங்கப் பலகையில்" பல கவிதைகளை எழுதி தமது எழுத்துலகப் பயணத்தை ஆரம்பித்தார். 2008ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தால் வருடந்தோறும் வெளியிடப்படும் "இந்து தர்மம்" எனும் சஞ்சிகையில் சைவ சமயத்தின் தொன்மையும் ஆலய வழிபாடும் எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை எழுதினார். 2008 ஆம் ஆண்டிலேயே பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் மலரான "இளங்கதிர்" எனும் சஞ்சிகையில் "தமிழ்மொழியில் ஐந்திலக்கண மரபு"" எனும் தலைப்பில் பல ஆய்வுக் கட்டுரைகளை மேற்குறிப்பிடப்பட்டுள்ள சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். (யோகராசா கலைவாணி எனும் பெயரில்)

2011இல் புரட்டாதி மாத இதழ் 36 ஜீவநதியில் "பல்துறைப் புலமையாளர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி" எனும் தலைப்பில் கவிதையொன்றினை வெளியிட்டார்.

பேராசிரியர் க.அருணாசலம் அவர்களின் "அருளம்" எனும்

பெயரில் வெளிவந்த மணிவிழா மலரிலும் ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

2012இல் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட "விளைநிலம்" எனும் சஞ்சிகையில் "திருக்கோவில் பிரதேச மக்களின் வாழ்வியலைக் கட்டமைப்பதில் குடிவழிமரபின் செல்வாக்கு" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

2014இல் மகளிர் அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட சஞ்சிகையிலும் இவரது ஆக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவை தவிரவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவர் மற்றும் மாணவர்களின் பங்குபற்றுதலுடன் வாரந்தோறும் "கலையமுதம்" எனும் பெயரில் "கந்துரட்ட FM (அலை வரிசையில்) தமிழ்ப் பிரிவில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வாசிக்கப்படுவது வழக்கம். இவ்வொளிபரப்பு நிகழ்ச்சியில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இவர் எழுதி வாசித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விசேட துறையில் உயர் வகுப்பில் சித்தியடைந்த இவர், 2009 இல் தமிழ்த்துறையில் "ஆறுமுகநாவலர் விருதினை" யும் பெற்றுக் கொண்டுள்ளார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமானிப் பரீட்சையில் சித்தியடைந்து ஆராய்ச்சி மாணவியாக ஆய்வு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார். இத்தோடு 2010 ஆம் ஆண்டு முதல் இரண்டரை வருடங்கள் தமிழ்த்துறையின் விரிவுரையாள ராகவும் கடமையாற்றியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத்தின் "இளங்கதிர்" சஞ்சிகையின் இதழாசிரியராகவும் செயற்பட்டுள்ளார். தற்போது இவர் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிகின்றார். நாமும் இவரை வாழ்த்துகிறோம்.

# பாரதி பாடல் பெண் விடுதலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியையும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியையும் இந்தியாவின் நவீனயுகத்தின் ஆரம்பம் எனக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில் சமூக, அரசியல் மாற்றங்கள் துரிதகதியில் இடம்பெற்று, நவீனத்துவ சிந்தனைகளும் துளிர்விடலாயின. இதனால் சமூகத்தில் ஆண், பெண் உறவில் பல்வேறுபட்ட கருத்தியல் தாக்கங்கள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே நவீனயுகக் கவிஞனான சுப்பிரமணிய பாரதியார், தமிழ் இலக்கிய உலகில் காலடி பதித்தார். பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட முயன்ற பாரதியார், அரசியல் விடுதலை, சமுதாயம், பண்பாடு, சமயம் என்றவாறு பல்வேறு துறைகளிலும் விடுதலையை அவாவி நின்றார்.

அதாவது பாரதி காலத்தில் மத்தியதர வர்க்கம் எழுச்சி பெறத் தொடங்கியது. இந்திய சுதந்திர தாகம் மேலெழத் தொடங்கியது. அத்தோடு, ஆங்கிலேய ஆட்சியினால் இந்தியர் வாழ்வில் இடம்பெற்ற தாழ்வின் தாக்கமே அவரது கவிதைக்குப் பொருளாயின. அதேநேரம், தான் வாழ்ந்த காலத்தில் இந்திய சமூகத்திற் காணப்பட்ட குறைகள் பல. அவரது கவனத்திற்குள்ளாயின. இதன் காரணமாகவே பாரதி, பெண் விடுதலை, சாதிய அடக்கு முறைகளிலிருந்து விடுதலை, ஆங்கில மொழி மோகத்திலிருந்து விடுதலை, சமயப் பிரிவினையிலிருந்து விடுதலை, பொருளாதார விடுதலை, அரசியல் விடுதலை எனப் பலவாறான விடுதலையை வேண்டி நின்றார். இதனைப் பாரதியின் படைப்புகளான கவிதைகள், கட்டுரைகள், வசன கவிதைகள், கதைகள், நாடகத் துணுக்குகள் என்பனவற்றில் காணலாம்.

இவ்வகையில், பல்துறையிலும் தன் சிந்தனைக் கதிர்களைப் பரப்பி, பாரம்பரிய மரபுவழிச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு, புதியதோர் உலகம் படைக்க விரும்பியதால் பாரதி, நவீன தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனித்துவமான ஓர்

இடத்தினைப் பெற்றுக் கொண்டார். அத்தோடு, பாரதியார் வழிப் பரம்பரையினர் எனச் சொல்லுமளவிற்குத், தனக்கென ஒரு பரம்பரையினரையும் தோற்றுவித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக, தமிழ் கூறும் நல்லுலகில் பாரதி, உலகமகா கவிஞனாகவே பெருமளவில் போற்றப்பட்டு வருகின்றார். ஆனால் பாரதியோ தனது சிந்தனைக் கதிர்களைப் பல்துறைகளிலும் பாய்ச்சியுள்ளார். அதாவது, அவரது கவிதைகளை நோக்குமிடத்து, ஒரு தலைசிறந்த ஆராய்ச்சி யாளனாகவும், பேரறிஞனாகவும், சிறந்ததோர் எழுத்தாளனாகவும், பத்திரிகையாளனாகவும் விளங்குகிறார். எனவேதான் நவீன தமிழ் இலக்கிய உலகில் பாரதியார், எல்லாத் துறைகளிலும் வழிகாட்டியாக விளங்குகிறார் என்பர்.

பாரதியின் கவிதைகள் பற்றி நோக்கும்போது, அவை பக்திப் பாடல்கள், தனிப்பாடல்கள், ஞானப்பாடல்கள், தேசியப்பாடல்கள், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், வசனகவிதை, பல்வகைப்பாடல்கள் எனப் பலவகையினதாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பெண் உரிமை மற்றும் பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் புதுமைப் பெண், பெண் விடுதலை, பெண்மை, பெண் விடுதலைக் கும்மி, பாஞ்சாலி சபதம் என்பன விளங்குகின்றன. அந்த வகையில், விதவை மறுமணம் கூடாது, பெண் சிசுக் கொலை, பெண் கல்வி மறுக்கப்படல், சிறுவயதில் திருமணம் என்பன போன்ற பல விடயங்களில் பெண் இனத்திற்காக ஒரு சார்பான அநீதி, ஆணுக்கான சமூக அங்கீகாரம், ஆதிக்க மனோபாவம் முதலியவற்றைப் பாரதி தனது எழுத்துக்களின் மூலமாக எதிர்த்து நிற்பதனைக் காணலாம்.

அவ்வகையில் பாரதி, பெண்களது உரிமையற்ற நிலையைச் சிந்தித்தார். இந்தியப் பெண்களை, தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களோடு ஒப்பிட்டார். தனிமைப்படுத்தப்படும், ஒடுக்கப்படும், அடிமைகளாக வாழும் கறுப்பின உரிமையை வலியுறுத்த முயன்றார். அவரது பரந்துபட்ட எழுத்துக்களிலும் (கவிதைகளிலும், கட்டுரைகளிலும்) பெண் உரிமையை

வலியுறுத்தலானார். சமூக, பொருளாதார விடயங்களில் சமவுரிமை வழங்க வேண்டும். கணவனை இழந்த பெண், மீண்டும் மணம் செய்வதைத் தடை செய்வது அச்சத்தினாலும், பொறாமையினாலும் வேறு ஆண்களுடன் பெண்கள் பேசக்கூடாது என்பது போன்ற கட்டுப் பாடுகள் ஒழிய வேண்டும் எனப் பெண்களுக்காக, பெண் விடுதலைக்காகப் பரிந்து பாடுகிறார் பாரதி. இதற்கு எடுத்துக்காட்டாக.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகுனிந்தார்"

எனப் பெண்விடுதலையைப் பாடுவதனைக் குறிப்பிடலாம். இவ்வாறே, இந்துமத வரலாற்றை ரிஷிகளும், நாயன்மார், ஆழ்வார் போன்றோரும் தெரிவிக்காத, தெரிவிக்கத் துணியாத புதுமையான கருத்துக்கள் பலவற்றைத், துணிச்சலுடன் தெரிவித்த பாரதியார், காலத்துக்கொவ்வாத கருத்துக்களை ஓங்கி நிராகரிக்கவும் தவறவில்லை இதனையே,

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் - இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

எனப் பாடும் பாரதி, காலங்காலமாக ஒரு தலைப் பட்சமாகப் பெண்ணையே சார்ந்தது எனக் கருதப்பட்டுவந்த கற்பு பற்றிய கருத்தியலை உடைத்து, இருபாலாருக்கும் பொதுமை நிலையில் வைத்து நோக்குகிறார் இந்த வகையில்,

"தையலை உயர்வுசெய் சரித்திரத் தேர்ச்சிகொள்
தொன்மைக்கு அஞ்சேல் புதியன விரும்பு
பணத்திைப் பெருக்கு சோதிடம் தனையிகழ்"

என்று புதிய ஆத்திசூடியையும் துணிந்து பாடியுள்ளார்.

மேலும் பெண் என்பவள், தொன்று தொட்டு ஆணுக்கு அடுத்ததாக, இரண்டாம் நிலையிலேயே நோக்கப்பட்டு வருகிறாள். பெண் இந்த மண்ணில் வந்து உதிக்கின்ற பொழுதில் இருந்தே மிக அருவருப்பாக, தீண்டப்படாதவளாகப் பார்க்கப்படுகிறாள்.

அதனால்தான், பெண்களுக்கு எல்லா உரிமைகளும் மறுக்கப் பட்டுள்ளன. இதைக்கண்டு சீற்றங் கொண்ட பாரதி, பெண் உரிமையை வலியுறுத்தும் நோக்கில் மறுமணம் செய்தல், சமூக, பொருளாதார விடயங்களில் சமவுரிமை, விவாகரத்துச் செய்வதற்குரிய சுதந்திரம், தமது கணவனைத் தெரிந்தெடுப் பதற்கான உரிமை, பெண் கல்வியின் முக்கியத்துவம், சிறு வயதுத் திருமணத்தை எதிர்த்தல் என்பன போன்ற பெண்ணியச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் படைப்புக்களை ஆக்கியுள்ளார்.

இவ்வாறே, நீண்டகால வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கற்பொழுக்கத்தைப் பரந்த அளவில் கேள்விக்குள்ளாக்கினார். கற்பொழுக்கம் என்பது மட்டுமன்றி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களையும் ஒழுக்கமுள்ள பெண்ணின் விசேட குணாம்சங்களாகத் தமிழர் மரபு கொண்டாடுகிறது. அதாவது "நாணும் அச்சமும் பெண்பாற்கு உரிய" என்ற பாரம்பரிய கருத்தியலின் நேரொத்த கருத்தாக, "நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று இக்கருதுகோள்களைப் பாரதி தகர்த்தெறிவ தோடு, அவற்றுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் பெண்களை, நாய்க்குச் சமமானவர்களாகக் கருதுகிறார். பெண்ணுக்குரிய உண்மையான நல்லொழுக்கம் என்பது, அவள் பெறும் அறிவும், சுதந்திரமும் என்பதே அவரது எண்ணம்.

மேலும், பாதியார் பெண்ணைத் தயாக, மனைவியாக, மகளாக, தெய்வமாக எனப் பல நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார். ஆயினும் பெண்ணையும், பராசக்தித் தெய்வத்தையும் வேறுவேறாகக் கருதியதாகத் தெரியவில்லை. பெண்மைக்கு ஏற்றம் அளிப்பதன் மூலம் பராசக்தியைப் போற்றுகின்றாரா, பராசக்தியைப் போற்றுவதன் மூலம் பெண்மைக்கு ஏற்றம் அளிக்கிறாரா என்னும் மலைப்பு ஏற்படும் வகையில் அவரது பாடல்கள் அமைந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக,

"சக்தியென்ற மதுவையுண்போமடா
தாளங்கொட்டித்திசைகளதிரவே" என்றும்,
"உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்

உயிரினுக் குரிய யின்ப மாகிடும்
உயிரினு மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள் ஆடு களிகொண்டே"

எனப் பெண்களின் பெருமை பேசும் பல பாடல் வரிகளைக் குறிப்பிட்டுக் கூற முடியும். இவ்வகையிலேயே சக்திதாசன் பாரதியார், வில்லிபுத்தூரில் சூதுபோர்ச் சருக்கத்தையே "பாஞ்சாலி சபதம்" என நாமஞ் சூட்டி பெண்ணிற்குப் பெருமை சேர்த்துள்ளார். ஏனெனில், ஆணுக்குப் பெண் அடிமை எனுங் கொள்கை பாரதியார் காலத்திலேயே தமிழ்நாட்டில் வலுப்பெற்றிருந்தது. அதனை ஒழித்து, பெண் விடுதலையை ஏற்படுத்துவதையே தமது நோக்கமாகக் கொண்டு, "பாஞ்சாலி சபதம்" எனும் நவீன தமிழ்க் காப்பியத் தினைப் படைத்துள்ளார் எனலாம்.

மேலும் பாரதி, கவிதைகளில் மாத்திரமன்றி, பெண், தமிழ்நாட்டின் விழிப்பு, பெண் விடுதலை, தமிழ்நாட்டு நாகரிகம், தர்ம யுத்தம் எனும் கட்டுரைகளிலும் பெண்மை மற்றும் பெண்விடுதலை பற்றிய கருத்துக்களை விரிவாக விளக்கியுள்ளார். அவை "பாரதியார் கட்டுரைகள்" என்ற நூலில் "மாதர்" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் "பெண்" என்ற கட்டுரையில், பெண்ணின் திருமணம் செய்யும் சுதந்திரம், விவாகரத்துச் செய்யும் உரிமை, சொத்துரிமை, நடமாடும் உரிமை, பெண்களை மதிக்காதவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் (வன்முறைக்கு உள்ளாக்குபவர்கள்) என்ற பெண் உரிமைக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான கட்டுரைகளில் வெளிவந்த பெண் விடுதலை தொடர்பான கருத்துக்களுக்குச் சில எடுத்துக்காட்டாக:

"..... கவனி! நல்ல பச்சைத் தமிழிலேயே சொல்லுகிறேன், நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம் உனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களிடத்தே வெளிப்படாமல், இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன், தாய், அவளைப் போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளி வீச, நாம் பார்க்க வேண்டும்" எனக் கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தையே:

"காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்" எனப் பாடலிலும் குறிப்பிடுகிறார். அந்த வகையில் நோக்கும்போது, பாரதியார் தம் பாடல்களிலே தெரிவித்துள்ள பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களையே, தெளிவாகத் தம் கட்டுரைகளிலும் கூறியுள்ளார். மேலும்,

"ஸ்திரிகள் தமக்கிஷ்டமானோரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரி அடிமையில்லை. உயிர்த்துணை வாழ்க்கைக்கு ஊன்றுகோல். ஜீவனிலே ஒரு பகுதி சிவனும் பார்வதியும் போல, விஷ்ணுவும் லஷ்மியும் போல...." என்றும்,

"ஸ்திரிகளை மிருகங்களாக வைத்து, நாம் மாத்திரம் மகரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால், ஆண் உயராது" எனவும் பெண் விடுதலை பற்றிய கருத்துக்கள், கவிதைகளில் காணப்படுவது போல் கட்டுரைகளிலும் காணப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறே, தமிழ்க் கவிஞரான பாரதியார், தனது "புதிய ரஷ்யாவும் ஸாரின் வீழ்ச்சியும்" என்ற கவிதையில் ரஷ்யப் புரட்சியை வரவேற்பதும், தென்னாபிரிக்கப் பெண்கள் விடுதலை பற்றிப் பாடுவதும் நல்ல உதாரணங்களாக விளங்குகின்றன.

தொகுத்து நோக்கும்போது, பெண் எந்தச் சூழ்நிலையிலும், எங்கும் எதிலும் ஆணுக்குச் சளைத்தவள் அல்லள், தாழ்ந்தவளும் அல்லள் என்று பெண்ணியவாதிகள் பலர், பெண்ணியம்சார் கருத்துக்களை உள்ளடக்கிய வகையில் தம் படைப்புக்களைப் படைத்து வருகின்றனர். அந்த வகையில்தான், பெண்களின் முன்னேற்றத்துக்கும், பெண் விடுதலைக்கும் உரிய வகையில், இக்காலக் கவிஞர்களின் கவிதைகள் பல காணப்படுகின்றன. ஆயினும், இந்தியாவின் தமிழ்ப் பகுதிகளில் பெண்ணிலைவாதம் பற்றிய எழுத்துக்களுக்கு ஆண்களே முன்னோடிகளாய் இருந்தனர் என்பது புதுமையானதே. அந்த வகையில், பாரதியார் மிக முக்கிய ஒருராவார். எனவே, சுப்பிரமணிய பாரதியார் அன்று கூறிய பெண்

விடுதலை பற்றிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே, இன்று பெண்ணியல்வாதிகள் பலரும், பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என்றால் தவறாகாது. இதனால் பாரதி தம் பாடல்கள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றினூடாகப் பெண்ணிற்கு ஏற்றமளித்தும், பெண்மைக்குப் பெருமை சேர்த்தும், பெண் விடுதலைக்கு வித்திட்டும் இருக்கின்றமையால், பெண் குலத்தால் என்றுமே போற்றப்பட்டு வருகின்றார். எனவேதான், பெண்விடுதலை பற்றிய கருத்துக்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் நவயுகக் கவிஞனான பாரதி போற்றப்படுகிறார்.

உசாத்துணை நூல்கள்

அரங்க மல்லிகா, (2002) பெண்ணியக் குரலதிர்வும் தலித்பெண்ணிய உடல் மொழியும், சென்னை: காவ்யா.

கைலாசபதி, க. (2002) (மூன்றாம் பதிப்பு) பாரதி ஆய்வுகள், சென்னை: குமரன் அச்சகம்.

சுப்புரெட்டியார், ந. (2001) பாரதியார் கவிதைகள், சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.

செல்வி திருச்சந்திரன், (1997) தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு, கொழும்பு சென்னை: குமரன் பதிப்பகம்

லறீனா, ஏ. ஹக். (2003) தமிழ்மொழியும் இலக்கியமும் சில சிந்தனைகள், இலங்கை: வர்தா பதிப்பகம்

சஞ்சிகைகள்

இளங்கதிர் (1957 - 1958) பேராதனைப் பல்கலைக்கழகம்,

தமிழ்சங்கம் (1966 - 1967) பேராதனைப் பல்கலைக்கழகம்,

தமிழ்சங்கம் ஞானம் (மார்ச், 2004) கண்டி.

# கட்டுரையாளர்

## வீ. சுஜாலினி

### - பாண்டிருப்பு



பஞ்ச பாண்டவர் பத்தினியாம்
பாஞ்சாலி தேவி குடி கொண்டு
பக்தர் துயர் தீர்த்தருளும்
பாண்டியூர் பதி தனில்

ஜோதிகளான எம்.வினாயகமூர்த்திக்கும் ஜே.செல்வரெட்ணம் ஆகியோருக்கும் ஏக புதல்வியாக சுஜாழினி தரணியில் தடம்பதித்தார்.

தனது ஆரம்ப பாடசாலைக் கல்வியை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியிலும், க.பொ.த(சா/த) கல்வியை வவுனியா சைவ பிரகாச மகளிர் கல்லூரியிலும் பயின்றதுடன், க.பொ.த.(உ/த) கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியிலும் பயின்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்.

இவர் தனது உயர்கல்வியை வந்தாறுமூலை - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்று பட்டதாரியாக வெளியாகவுள்ளார். இவர் தனது பாடசாலைக் காலங்களில் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் அதாவது இலக்கணப் போட்டி, தமிழ் அறிவுப் போட்டிகளிலும், இசைத்துறை சார்பான போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றிச் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் தன்னகத்தே வசப்படுத்தியவர்.

இவர் பல்கலைக்கழக பட்டத்தின்போது தமிழ் சிறப்பு கற்கை நெறியில் விடுகை வருடப் பட்டதாரியாக கிழக்குப் பதியில் புகழ் பூத்த பெண் படைப்பாளி ஒருவர் பற்றிய பல்நோக்குப் பார்வையில் தனது பட்டத்திற்கான இறுதி ஆய்வறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் இவர் பாண்டிருப்பின் கலை - இலக்கியம் - சமயம் - சமூக தொண்டுகளில் தன் வாழ்நாளை தியாகம் செய்து வாழும் பாண்டிருப்பு சித்திரவேலாயுத தேவஸ்த்தான பிரதம குருக்கள், சித்த ஆயுர்வேத வைத்தியரும் வரைகவிஞரும், எழுத்தாளரும் எமது பேரவையின் வெளியீட்டுப் பிரிவின் பிரதிநிதியுமான சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்களின் நேரடிக் கண்காணிப்பில் வாழ்ந்து வளர்க்கப்பட்டு வருகிறார். சுஜாழினியின் கலை - இலக்கிய வாழ்வு உயர்வு பெற நாமும் வாழ்த்துகிறோம்.

## "பாதை மாறிய பயணங்கள்" நாவலில் பெண்களின் யதார்த்த நோக்கில்...

பாதைமாறிய பயண ஆசிரியர் மணல்லூர் அசோகா; பெண் இலக்கியப் படைப்பாளி ஆகையால் தான் வாழ்ந்த சமூகத்தில் காணப்பட்ட பெண்ணையே தனது நாவலின் பாத்திரங்களாக அறிமுகப்படுத்தியுள்ளார். அந்த வகையில் சமூகத்திலே பெண்களுக்கு காணப்பட்ட பிற்போக்கான சிந்தனைகளை உள்வாங்கியும், அதற்கு முரணான சிந்தனைகளை உள் வாங்கியும் தனது பெண்கள் பற்றிய பார்வையை வெளிக் கொணர்ந்திருக்கின்றார்.

நாவலின் பிரதான பாத்திரமான நித்தியாவையும் அவளது தாயையும் பிற்போக்கான சிந்தனையுடனும், குடும்பம், சமூகம் என்ற கட்டுக்கோப்பிற்குள் வாழும் பெண்களாகவே சித்திரித்துள்ளார். அடுப்பங்கரை, வீடு, குடும்பம், தாய்மை எனும் வரையறைக் குள்ளேயே தனது வாழ்க்கையை அமைத்து வாழும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாக நித்தியாவின் தாயைக் குறிப்பிடலாம்.

மேலும் சமூகத்தில் பெண்களது வாழ்விற்கும், பெண்களது முன்னேற்றப் பாதைக்கும் தடையாக காணப்படும் சீதனம், குடும்பச் சூழல் போன்ற பல்வேறு காரணிகளால் தனது எதிர்கால வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ள பெண்கள் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக நித்தியாவை அறிமுகம் செய்துள்ளார். குடும்பத்தில் மூத்த பெண் பிள்ளையான நித்தியா தன் குடும்பத்தின் சுமையின் அரைவாசியைத் தானே ஏற்று நடக்கும் நிர்ப்பந்தத்தில் தள்ளப்படுகிறாள். அது மட்டுமன்றி தான் உயிருக்குயிராய் நேசித்து வாழ்ந்த தனது காதலனான வசந்தனை, தந்தையின் பேச்சை மீறி நடக்கக்கூடாது என்பதற்காக தந்தையின் விருப்பப்படியும் , தனது குடும்பத்தின் நலத்துக்காகத் தனது சுதந்திரங்கள், ஆசைகள்

அனைத்தையும் பாழாக்கும் பெண்ணாக நித்தியாவைப் படைத்திருக்கின்றார். அதாவது தான் வாழ்ந்த சமூகத்தில் நித்தியாவைப் போல் பிற்போக்குத் தனமான குடும்பம் என்ற கட்டுக் கோப்பிற்குள் எத்தனையோ நித்தியாக்களைச் சமூகத்தில் இன்றும் காண முடிகின்றது. இது பெண்கள் பற்றிய பாரம்பரிய சிந்தனையையே வெளிப்படுத்துகின்றது. இங்கு நித்தியா குடும்ப நலத்திற்காக தன் நலத்தையே இழந்து விதவை எனும் நாமத்தையே சூடிக்கொள்ளும் துர்ப்பாக்கியவதியாக படைக்கப் பட்டுள்ளாள்.

நித்தியாவின் தங்கை கௌசியை ஆசிரியர் முற்போக்குத் தனமாகவே படைத்திருக்கின்றார். கௌசி தான் காதலித்த ஜெயக்குமார் பிறமதத்தவனாக இருந்தும், தந்தை எவ்வளவு தடுத்தும், பேசியும் அதனை மீறி தன் விருப்பப்படி செயற்படும் துணிச்சல்மிக்க பெண்ணாக கௌசியைப் படைத்திருக்கின்றார். கௌசியைப் போன்று சமூகத்தில் இன்றும் எத்தனையோ பெண்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதனையே வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.

ஒரே குடும்பத்திலே மூடத்தனத்திற்கும், சமூகக் கடப்பாட்டிற்கும் குடும்பம் எனும் வரையறைக்குள் வாழும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாக நித்தியாவைப் படைத்திருக்கும் ஆசிரியர், அதே குடும்பத்தில் சமூக வரையறை, குடும்பக் கட்டுக்கோப்பு முதலியவற்றை மீறி முற்போக்குத்தனமாக செயற்படும் பாத்திரமாக கௌசியைப் படைத்திருப்பது பெண்கள் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நிற்கின்றது. இத்தன்மையினதாகப் பெண் நிலை பற்றிய நோக்கு நிலவி வருவதை அவதானிக்க முடிகின்றது.

சீதனம், சமூகம், குடுப்பச் சூழல் போன்ற காரணிகள் பெண்களது சுதந்திரமான வாழ்விற்கு வேலியாக இருப்பதனை

இந்நாவலில் வரும் பாத்திரங்கள் வாயிலாக அவதானிக்க முடிகின்றது. ஆசிரியரின் பெண்களின் யதார்த்த நோக்கு ஒரு குடும்பத்தில் இருக்கும் இரு பெண்களை எடுத்துக்காட்டி வேறுபாடு காட்டுவதாகவே அமைந்திருக்கின்றது.

இவ்வாறாக இன்றும் எத்தனையோ பெண்கள் குடும்பத்தினது நலனுக்காக தங்களது வாழ்வையே அழித்து வாழ்ந்து கொண்டிருக்கும் தன்மையைச் சமூகத்தில் காண முடிகின்றது. அது மட்டுமன்றி ஒரே குடும்பத்திலேயே பிற்போக்குத்தனமாகவும், முற்போக்குத்தனமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் சமூகத்தை இனங்காட்டியுள்ளார் நாவலாசிரியர். ஆசிரியர் வாழ்ந்த பிரதேசம் பழைமை போற்றும் சமூகம் ஆகையினால் நாவலின் பிரதான பாத்திரத்தை (நித்தியா) பிற்போக்குத்தனமாகவே படைத்திருக்கின்றார்.

தொகுத்து நோக்கும்போது பாரம்பரிய சமூக அமைப்பில் அதனை முற்றிலும் ஏற்றுவாழும் பாரம்பரியமான பெண்களின் மத்தியில் நவீன சிந்தனைகளை உள்வாங்கிய பெண்கள் முற்போக்குத் தனத்தையும் எடுத்துக் காட்டுகின்றார். இதனூடாக பெண்களது சமூக முன்னேற்றத்தை இந்நாவலில் வெளிப்படுத்தவும் முனைகின்றார் இவ்வாசிரியர் என்பது கண்கூடு.

# கவிதாயினி
## ஏ. முபீதா
### - சம்மாந்துறை



இயற்கை எழில் கொஞ்சும் சரித்திரங்கள் பல சொல்லும் சரிந்து விழாமல் மொழி வெல்லும் சம்மாந்துறை தாயகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் அல்-ஹாஜ் கே.எல்.அசனார் (ஜே.பி) மர்ஹூமா சீனத் உம்மாவின் செல்வப் புதல்வியாக முபீதா பதி ஊன்றினார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை அல்-அஸ்ஹர் வித்தியாலத்திலும், இடைநிலைக் கல்வியை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

இவரின் எழுத்துலக வாழ்வின் தடம் பதிப்பதற்கு பூரண உதவிகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய தனது தந்தையார் கலாபூஷணம் கே.எல்.அசனார் (ஜே.பி) அவர்களை நினைவு கூர்கிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை F.M. இன் "ஒலி மஞ்சரி" என்ற கலை-இலக்கிய நிகழ்ச்சி மூலம் "பிரிந்த தாய்க்கு இரங்கல்" என்ற கன்னிக் கவிதை ஊடாக அறிமுகமானார். அக் கவிதைக்கு நிறைய வாழ்த்துக்கள் குவிந்ததுவும், அந்நாளில் ஒலிபரப்பான கவிதைகளில் இவரது படைப்புக்கே முதலிடம் கிடைத்தமையும் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை.

இவர் தன் படைப்புக்களை "ஏ.முபீதா - சம்மாந்துறை", "அசனார் முபீதா" எனும் பெயர்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை F.M. வானொலியிலும், தினகரன் வார மஞ்சரியிலும் இவரது கவிதைகள் இன்றும் வலம் வந்து கொண்டு தான் இருக்கிறது.

2011ம் ஆண்டு நிந்தவூர் ராஜகவி ஏ.ஸீ.றாஹில் தொகுத்த பிறை F.M. வானொலி "ஒலி மஞ்சரி" நிகழ்ச்சிப் படைப்பாளிகளின் "அன்புடன் பூங்காற்று" எனும் கவிதைத் தொகுப்பிலும் இவரின் கவிதைகளான : "மனதைக் கொல்லும் மழலை மொழி", "பிரிந்த தாய்க்கு இரங்கல்", "மனிதா கற்றுக் கொள்", "சுதந்திரமில்லா பெண்கள் சிறைக் கைதிகளாக", "நட்புக்காக சில நிமிடங்கள்", "அன்னையர்க்கு ஒரு தினமா?" போன்றவை பிரசுரமாகி இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரின் இலக்கிய ஆளுமைமென்மேலும் வளர எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

# என்னுடன் பேசிய தென்றல்

மங்கிப் போகும்
மாலைப் பொழுது ஒன்றில்
கற்பனைக் கனவுகளை
கரைத்துக் கொண்டிருக்கையில்
இளம் தென்றல் இசையோடு

ஆறுதல் வார்த்தையாக
குளிர்மையைப் பரப்பி,
நறுமணத்தை நாராய் கிழித்து
என்னுடன் பூசியது
என் தனிமையை வசப்படுத்திக் கொண்டு

என் விழிகளால்
கண்ணீர்த் துளிகளை சிந்த
உள்ளத்தில் பதற்றம்
பேரலையாக எழ
என் சிந்தனைகளெல்லாம் சிதறிக் கிடந்தது
என் முற்றத்தில் - அப்போது
ஒளித்தென்றல் இனிமையாக
என்னோடு பேசியது

இன்பம் கண்டு
துவளாத தோழி என்று
என் தோள் தட்டியது

தென்றலே நீயா?
என்று ஒரு வினா தொடுக்க
விடை சொல்லாமல்
தொலை தூரமானது
அவளின் ஞாபகங்களைப் போல
என்னுடன் பேசிய தென்றல்

# கவிக்குயில்
# ஸப்னா அமீன்
## - சாய்ந்தமருது



*அக்கரைப்பற்றூர் அழகான வனப்பூ அதில் தான் என் பிறப்பு. இப்போது என் இருப்பு! சாய்ந்தமருதூர்
அதற்கும் இருக்குது தனிச் சிறப்பு! என்கிறார் கவிக்குயில் ஸப்னா அமீன்.*

*சிறு வயதினிலே இவர் விளையும் பயிர் எனக் கண்டதினால் ஆசான் இவரை தட்டிக் கொடுத்தார். கலைத்துறையில் தான் வேர் விட்டிருப்பதற்கும் திறமையின் வெளிப்பாட்டிற்கும் காரணம் தனது ஆரம்ப பாடசாலை ஆசான்களே என தனது ஆசான்களை நினைவு படுத்தும் இவர் தனது தாய் நிஸ்ரினா அமீன், தந்தை அகமது முகைதீன் அமீன் தம்பதிகளின் மூன்றாவது புதல்வி ஆவார். தனது தாய், தந்தை மற்றும் சகோதரிகளையும் தனது கலைத்துறை பிரவேசத்திற்கு காரணமாய் நினைக்கிறார்.*

*சாந்தமான குணமுடைய இவர், தனது குணத்திற்கு இசைவான பல கவிதைகளை இவரிடமிருந்து மலரக் கண்டோம். கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், நாடகப் பிரதி இயக்கம் என பல்வேறு துறைகளில் தனது இலக்கியப் பங்களிப்பை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற பிரபல ஊடகங்களில் "ஸப்னா அமீன்" "கவிக்குயில் அக்கரையூர் ஸப்னா" "கலைமுத்து ஸப்னா" "ஸப்னா அன்ஸார்" ஆகிய பெயர்களில் தன்னை அடையாளப்படுத்துகிறார்.*

*தனது 06வது வயதில் பாடசாலை மாகாண மட்ட போட்டியில் பங்கு பற்றி சிறந்த நாடக நடிகைக்கான பரிசை தட்டிக் கொண்டு கலைத்துறையில் காலடி எடுத்து வைத்திருக்கும் இவர் 13 வருட கலைத்துறை வாழ்க்கைக்கு சான்றாக தனது 17வது வயதில் முதல் முதலாக "நிலாச் சோறு" கவிதைத் தொகுதியை வெளியிட்டதுடன்*

மருதூர் அன்ஸாரின் தயாரிப்பில் உருவான "உன்னை நினைப்பதற்கு" கவிதைத் தொகுப்பிலும் இடம் பிடித்துள்ளார். "பம்மாத்துக் கவிதைகள்" கவிதைத் தொகுதி மற்றும் கவிதைகள் அடங்கிய இறுவெட்டு என தனது அடுத்தடுத்த முயற்சிகளில் ஈடுபடவுள்ளார். இலங்கையில் வெளியான "மனிதம்" குறுந்திரைப்படத்துக்காக கதை வசனம் எழுதியுள்ளார். விரைவில் வெளிவரவுள்ள "மங்கா" திரைப்படத்துக்கு மூன்று தமிழ் பாடல்களையும் எழுதியுள்ளார். கலை, அரசியல் மேடைகளிலும் கவியரங்கில் கலந்து கொண்டு கவிதைகள் பல பாடியுள்ளார். Lacsdo media Network SriLanka கல்முனை எழுத்தானர் சங்கம் முக்கிய பொறுப்புக்களில் உள்ள இவர் அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையிலும் அங்கத்தவராகியுமுள்ளார்.

அறிவிப்புத் துறைக்காக இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் தேசிய இளைஞர் அறிவிப்பாளர் விருதையும் பெற்றுள்ளார்.

கலைத்துறை பங்களிப்புக்காக பல அமைப்புக்கள் சாமஸ்ரீ, தேச சக்தி, கலைமுத்து, கலைதீபம் போன்ற பட்டங்களையும் விருதினையும் வழங்கி கௌரவித்துள்ளது. பெண் எழுத்தாளர்கள் அரிதாகிப்போன இன்றைய சூழலில் இத்தகைய பெண் படைப்பாளிகளின் வருகை இலக்கிய உலகிற்கு ஆரோக்கியமான ஒன்றாகும்.

கலைத்துறையிலும், ஊடகத்துறையிலும் கவிஞராய், அறிவிப்பாளராய், எழுத்தாளராய் இருந்து கலைத்துறையில், சமூக சேவையிலும் ஈடுபடும் உள்ளங்களை பாராட்டி கௌரவித்து விருது வழங்கி வரும் Lacsdo media Network SriLanka தலைவரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் ALMC சாய்ந்தமருது கொள்கை பரப்பு செயலாளருமான சாமஸ்ரீ மருதூர்அன்ஸார் இவரது வாழ்க்கைத் துணைவராகக் கிடைத்ததும் இவருக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்கிறார். இந்த கலைமுத்து எமது நாட்டிற்கு கிடைத்த பெரும் சொத்து என நாமும் வாழ்த்துவோம்.

## சமூகத் தலைமை

மண்ணென்று
பெண்ணென்று
பொன்னென்று கூறும் கண்

தலை அன்று கண்டோம்
இதுவன்று,
தலைமை என்று,
சொல்லென்றும் வில்லேந்தி
பல்லாக்கில் வந்தீரே,
பொல்லாதார் பல்லொடிந்து
மல்லாரக் கண்டீரே...

விஸ்வரூபம்...
அஷ்ரப் எனும் பெயரினிலே
நாம் அன்று கண்டோமே,
காக்கும் குரல் காங்கிரஸே என்றோமே

எம் நெஞ்சமதில் குடியிருக்கும் செந்தேனே
இன்றுன்னை நான் பாட வந்தேனே

ஆடு நனைகிறதென்று - ஓநாய்
அழுது வென்ற காலமது...
அன்று
வல்ல கோனாய்...
நல்ல தூணாய்...
எமக்காய் வந்தாய் தானாய்
எம்

துன்பங்கள் போயினவே; வீணாய்
கண்டோமே இன்பங்கள்; தேனாய்
தலையே...
நாடுகிறோம்
இன்றெங்கு போனாய்...?
விலங்கிடப்பட்ட எங்களாசைகள்,
தலைமைக்கே கேட்காத ஓசைகள்,
வலைகளுக்குள்ளாடும் குடிகளுக்கு,
விடிவுக்காய் மடிந்த மாமனிதா...!

பானை பிடித்தங்கள் கைகள்,
பேனை பிடிப்பதற்காய்...
நாங்கள் படிப்பதற்காய்
பல்கலையே பகர்ந்தாயே...

நுரைகடலதுவிலே - நாம்
கரை நின்று பார்க்கையிலே
பிறை போன்று மின்னிடுதே
அஃதே துறை முகமோ...?

எம்மிளைஞர் குறைகண்டு
துறைமுகம் அதைக் கொண்டு
கரைகண்ட நிறை குடும்பம்
எத்தனையோ...?

முஸ்லிம் காங்கிரஸே உம்முடிவு,
அஃதே எமக்கெல்லாம் விடிவு,
மூவின மக்களின் பகிர்வு - இன
நல்லிணக்கப் பாதையில்...
நுஆ வே உம் நகர்வு.

நெஞ்சதிலே வாள் கொண்ட வீரா
நிதமும்
வாளுக்கே உன்னோடு போரா...?
வெற்றியும் நீயும் வெவ்வேறா - நாம்
உம் கொடியில் சேர்ந்திட்ட நாரா...?
உம் கொள்கை ஒரு போதும் சோரா
நீர் இன்றி எமக்கிங்கு பேரா...?
எமதுரிமைக்காய்
பொறுமையுடனுறவாடி
பெருமை உதிர்த்த பெருந்தலைவா...!
ஹக்கீம் எமனும் உன் தேர்வு கண்டு
விக்கித்திளைத்தோடுமுண்டு.

விஞ்சும் அவர் புகழ்பாட
பிஞ்சு எனைக்கேட்டால்
என்னென்பேன்
அவரன்பால்...
எமக்கெல்லாம் கலாமானார்,
நாம் எழுதும் கலமானார்,
மரணித்து மரமானார்
அம்மரத்துக்கே உரமானார்

வீட்டதனிலே
இவர் காட்டும் கனிவுக்கும்
கோர்ட்டதனிலே
இவர் மீட்டும் துணிவுக்கும்,
இவருக்கு நிகர் இவரே தான்...

சின்னஞ் சிறியவனாய் நான்
கொஞ்சி விளையாடுகையில்
வருகிறது - ஒரு
குறுஞ் செய்தி
உம்மா உதிர்ந்து போனார்
உம்மம்மா உலுங்கிப் போனார்
விழுங்கிக் கொண்டேன் நான்...

பக்கத்து வீட்டு பகது
பதற்றத்துடன் வந்ததுதான்
தெரிந்தது
பாவை எனக்கு

தந்தைக்குஉதாவது...?
இல்லை இல்லை...
தந்தை விடுத்து, தமையனுக்கு...?
வாய்ப்புமில்லை...

அழுகைகள் அத்து மீற,
தாயார் கண்ணீர்
ஆற்று நீரை நிரப்பவும் தயார்...!!!

சோற்றை மறந்து,
போற்றிக் கதற
கல்நெஞ்சக் கயவர்க்கு - வார்த்தை
தூற்றி(ச்) சிதற - எமக்காய்
மெழுகாய்
கழுகு கொண்டு சென்றதுவோ...?

அஷ்ரப் எனும் அறிவொளியே
இறந்தீரோ...?
முன் வீட்டு முஸ்தபா முழங்க
சிட்டாய்(ப்) பறந்தேன் - என்
சிற்றறை நோக்கி...
நூலக இடுக்கில் மடங்கியிருந்த
நூலாத நூலதனை நுகர்ந்து கொண்டேன்
படித்தேன்...
நானும் வடிக்க...
கேள்விகள் என்னுள் எதிரொலிக்க...
மரணம் தழுவியது
"அஷ்ரப்" எனும் கவிஞரையா...?
"அஷ்ரப்" எனும் கலைஞரையா...?
"அஷ்ரப்" எனும் அரசியல் வாதியா...?
"அஷ்ரப்" எனும் சட்ட வாதியா...?

ராத்தா

இரத்தம் சொட்டும் கண்ணீரோடு
எனக்காய் மீட்டுகிறாள்...
"அஷ்ரப்"
அவர் பெரும் கலைஞன்...
இலக்கிய கவிஞன்...
அரசியல் இளைஞன் - சட்டத்தில்
அஞ்சாத நெஞ்சன்
அன்று நான் தெரிஞ்சன்

இது கதையல்ல...
கண்ணீர் காவியம் - இவர்

எம் நெஞ்சங்களில்...
செதுக்கிய ஓவியம்

அன்று...
எனக்குள் - என்
நெஞ்சுக்குள்...
நான் எனும் நீ... கொடுத்து
நீ எனும் நான் ஆனாய் நீ

அன்று பிடித்தவள் உன் கரங்களை
உம் வழிமீது விழி வைத்து
நகர்கின்றேன்...

அன்றழுது விம்மிய கண்கள்
இன்றும் மறவாது
பிறையோடு...
இறையோடு...
முறையோடு...
உமக்காய் முந்தானை ஏந்த
எம் நெஞ்சமதில் குடியிருக்கும்
செந்தேனே...!
இன்றுன்னை நான் பாட
வந்தேனே...!

SLMC யின் இளைஞர் மாநாட்டின் போது மர்ஹூம் தலைவர் அஷ்ரப் அவர்களின் நினைவு தின சிறப்புக் கவியரங்கில் 04-11-2015 "திறமைக்கான தேடல்" விருது விழாவின் போதும் வாசிக்கப்பட்ட கவிதை.

# அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவைச் சுவடுகள் - 2015




ISBN 978-955-7965-00-0

Royal - Sainthamaruthu : 0777 488 477